பக்கங்கள் : பன்னிரண்டு

பொதுசன நூலகம்
நாவாந்துறைக் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 17 வெள்ளிக்கிழமை (03.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 310

## கிளிநொச்சி நகரம் நேற்றுத் தொடர்ச்சியாக அதிர்ந்தது

# பகலில் விமானத்தாக்குதல்; இரவில் கடும் ஷெல் வீச்சு!

## புலிகளின் அரசியல், சமாதானச் செயலகங்கள் சேதம்!!

வவுனியா, ஒக்ரோபர் 03

**வன்னியின் கேந்திரப் பகுதியான கிளிநொச்சி நகரம் நேற்றுத் தொடர்ந்து அதிர்ந்தது.**

**பகலில் கடும் விமானத் தாக்குதல்களாலும், இரவில் அகோரச் ஷெல் வீச்சுக் களாலும் மாறி மாறி அது தொடர்ச்சியாக அதிர்ந்தது.**

மக்கள் மத்தியில் பதற்றமும் பீதியும் பரவின. ஏற்கனவே நகர்ப்புறத்தை விட்டு பலரும் வேறு இடங்களுக்குச் சென்று விட்டனர். எஞ்சியிருந்தோரும் நேற்றைய தொடர் அதிர்ச்சியினால் இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர்.

நேற்றைய விமானத் தாக்குதல்களின் போது விடுதலைப் புலிகளின் அரசியல் செயலகமும், சமாதானச் செயலகமும் சேதமுற்றன.

கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தலைமையகம் மற்றும் அவர்களின் சமாதானச் செயலகம் ஆகியவற்றின் மீது நேற்று நண்பகல் விமானப்படையினரின் ''ஜெற்'' விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இத்தாக்குதலில் அரசியல் (12ஆம் பக்கம் பார்க்க)



சேதமடைந்த சமாதானச் செயலகம்

## கிளிநொச்சி நகரப்பகுதியைப் படைகள் நெருங்கிவிட்டன என்கிறார் ரம்புக்வெல

### இன்னும் மூன்றரைக் கிலோமீற்றர் தூரம் மிகுதி

கொழும்பு, ஒக்.03

கிளிநொச்சி நகரைப் படையினர் கைப்பற்றுவதற்கு இன்னும் மூன்றரை கிலோ மீற்றர் தூரம் மாத்திரமே உள்ளது என்று அமைச்சரும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமான (12ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து விதிமுறைகள் மீண்டும் இன்றுமுதல் நடைமுறைக்கு வருகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ்.மாவட்டத்தில், போக்குவரத்து விதிமுறைகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப் படும். வீதி ஒழுங்குகளைப் பேணும் நடவடிக்கையில் பொலிஸார் இன்று முதல் ஈடுபடுவார்.

வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஷான் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துச் சட்டங்களை அமுல் படுத்தல்' என்னும் தலைப்பிலான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் முக்கிய தலைவர்கள் கூடி ஈழத்தமிழருக்காக ஆதரவுக் கோஷம்!

சென்னை, ஒக்டோபர் 03

தமிழகத்தில் ஈழத்தமிழர்களுக்கான ஆதரவு நாளுக்கு நாள் பிரவாகித்துக்கொண்டே போகிறது. இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகள் வழங்கி ஈழத்தமிழர்களைக் கொல்லத் துணைபோகின்றது என்று தெரிவித்து - அதனைக் கடுமையாகக் கண்டித்து - தமிழகம் முழுவதும் நேற்று உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெற்றன.

பழ. நெடுமாறன், திருமாவளவன், டாக்டர். ராமதாஸ் உட்பட தமிழகத்தின் முக்கிய அரசியல் தலைவர்களும், பொதுமக்களும் இந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு ஈழத்தில் இன்னல்படும் தமது உறவுகளுக்காக ஆதரவுக் கோஷம் எழுப்பினர். இலங்கைத் தமிழர்கள் மீதான இராணுவத் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். இலங்கை இராணுவத்திற்கு இந்தியா இராணுவ உதவிகள் உள்ளிட்ட உதவிகளை வழங்கக் கூடாது. (11 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் ஆலயங்கள் பலவற்றில் படையினர் தேடுதல் நடத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்.3

வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சைவ ஆலயங்களில் படையினரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல்கள் நடத்தி வருகின்றனர்.

மாகியப்பிட்டி கண்ணகை அம்மன் கோயில் பகுதியில் கடந்த திங்கட்கிழமை ரோந்து சென்ற படையினர் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்தை (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமரை நேற்று கனிமொழி சந்தித்துப் பேச்சு

புதுடில்லி, ஒக. 03

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படும் சம்பவம் தொடர்பாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐம்பத்தொரு உணவு லொறிகள் வன்னியை அடைந்தன!



வவுனியா, ஒக். 03

வன்னியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பட்டினி நிலையை எதிர்நோக்கும் எதிர்கொண்டுள்ள மக்களுக்கான உணவு விநியோகம் சுமார் மூன்று வார காலத்தின் பின்னர் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 51 லொறிகள் நேற்று (12ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளைக் கேளுங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி
வருகின்றது " மீண்டும் வாழ்வோம் ".
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெய் விற்பனை

எமது சங்கத்தில் பசும்பாலில் இருந்து உற்பத்தி செய்யப்படும் தரமான நெய் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் சங்கத் தலைமை அலுவலக விற்பனை நிலையங்களிலும் எமது கிளை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை விவரம்:

| | மொத்தம் விலை | சில்லறை விலை |
|---|---|---|
| நெய் 750 மி.லீ | 600.00 | 650.00 |
| 375 மி.லீ | 300.00 | 325.00 |
| 187.5மி.லீ | 150.00 | 167.50 |

பொது முகாமையாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச சபையில் கடமையாற்றும் பணியாளரான
த.பத்மநாதனின் பாசமிகு தாய்

### கந்தையா செல்வநாயகி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

புத்தூர்.
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலி - கிழக்கு பிரதேசசபை.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை
செல்வி மணிமேகலை செல்லையா
அவர்களின் சகோதரி
அமரர்
மாணிக்கப்பிள்ளையார் தையல்நாயகி
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/ஊரெழு கணேச
வித்தியாசாலை.
ஆசிரியர் கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18
03
1951



மறைவு
15
10
2007

### அமரர் இராமலிங்கம் அற்புதராசா

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்- வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஆருயிர்த் துணைவனாய் அன்பு மிகு தந்தையாய்
பாசமுள்ள மாமனாய் மழலை மொழி பேசும் பேரனாய்
உதவிக்கரம் நீட்டும் அயலவனாய் அரவணைக்கும் உறவினனாய்
கொடுத்துச் சிவந்த கரமும் கொடைக் குணமும் போனதுவோ
ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்புரு மறையாது
தீராது நம் துயரம் வாரயோ மீண்டும் முன்னே
உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பீனும்
எம் கண்ணீரைக் காணிக்கையாகத் தருகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மகன்மார்,
மருமக்கள்,
பேரப்பிள்ளை.

வைரவர் கோயிலடி,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(சி/554942)

## சர்வதேச நல்லொழுக்க தின விழா இன்று

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், சக்தி நிறுவனம், தீபம் அமைப்பு ஆகியன இணைந்து, போரூட் நிறுவன அனுசரணையுடன் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட உதவி நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தெ.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பால்நிலைசார் துஷ்பிரயோக செயற்குழு யாழ்.இணைப்பாளர் எவ்.ஆர். ரஜனி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (204)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று தமிழ்த்தின விழா

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ்த்தின விழாவும், காந்தி தினமும் கல்லூரி ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவர் வண.ஜி.நடராசா தலைமையில் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். மற்றும் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் உரையாற்றுவதோடு, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (1-29)

## 'சலங்கையும் சந்தமும்' நடன நிகழ்வு நாளை

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன் நடன ஆசிரியை திருமதி பிரஷாந்தி உதயபாபுவின் நெறியாள்கையில் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த நடன ஆசிரியர்களின் மாணவிகள் இணைந்து வழங்கும் 'சலங்கையும் சந்தமும்' கலை நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (50)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள SHARP போட்டோக் கொப்பி இயந்திரம் SF 1118 விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
TP:- 0779905305
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு காணி விற்பனைக்கு

உடுவில் தெற்கு, மானிப்பாயில் 5 அறைகள் கொண்ட வீடும் (2பரப்பு) மற்றும் வெற்றுக் காணித்துண்டுகளும் விற்பனைக்குண்டு.

தொ.பே: 021 222 5859
077 4174803

திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி
நடத்தும்

### இசையே வாழி

(கூட்டுப் பிரார்த்தனை)

காலம்: நாளை (04.10.2008) சனிக்கிழமை
நேரம்: மு.ப. 10.00 மணி - 12.00 மணி
இடம்: கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பிரவேசம் இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
-திருமறைக் கலாமன்றம்

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள் 10ஆம் ஆண்டு நிறைவு



திருமதி
### மயில்வாகனம் றெஜீனா

பிறப்பு
18.08.1946

இறப்பு
03.10.1998

பத்தாண்டு பறந்தோடி விட்டதம்மா!
பாசமுடன் என்றும் எம் நினைவில்.

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

211, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### அப்பையா தேவன் (செல்லக்கிளி - மெக்கானிக்)



2 ஆம் ஒழுங்கை, அரசடி றோட், நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது ஜேர்மனியில் வசித்தவருமாகிய அப்பையா தேவன்(செல்லக்கிளி - மெக்கானிக்) ஜேர்மனியில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா-சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், விக்னேஸ்வரியின்(தனம்- ஜேர்மனி) பாசமிகு கணவரும், குணசிங்கம், இரத்தினசிங்கம்- பாலசிங்கம், தர்மகுலசிங்கம்(இந்தியா), நாகேஸ்வரி அம்மா(கிளி- ஜேர்மனி), நகுலேஸ்வரி அம்மா(சண்முகவடிவு- ஜேர்மனி), உமா (ஜேர்மனி) காலஞ்சென்ற சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தனலெட்சுமி, செல்லப்பாக்கியம், தங்கமணி, சந்திரேஸ்வரி(சந்திரா- இந்தியா), பத்மநாதன்(ஜேர்மனி), நவ ரெட்ணராசா(ஜேர்மனி), ஜெகன் (ஜேர்மனி), றஞ்சி(பிரான்ஸ்) காலஞ்சென்றவர்களான யோகராசா, விசயராசா(விசயன்) மற்றும் ஜெயராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நாளை (04.10.2008) சனிக்கிழமை நடைபெறும். 3ஆம், ஒழுங்கை அரசடி றோட், நல்லூரிலுள்ள அவரது சகோதரரின் இல்லத்தில் துக்க நிகழ்வு நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3 ஆம் ஒழுங்கை,
அரசடி றோட் நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அ.குணரெட்ணம்(குணசிங்கம்),
அ.ரத்தினசிங்கம்(சகோதரர்கள்).

### பொலின்றூபி எட்வேட்,



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 23, கண்டி வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பொலின்றூபி எட்வேட் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை அன்ரனி எட்வேட்டின் அன்பு மனைவியும் டொமினிக்கா (பிரான்ஸ்), றீற்றா(பிரான்ஸ்), எமிலியானஸ்(பிரான்ஸ்), ரியூலிப் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேஸ்வரன் (பிரான்ஸ்), ராஜ்மோகன்(பிரான்ஸ்), திலகா(பிரான்ஸ்), அன்ரன் மகேசன் (I.C.R.C) ஆகியோரின் மாமியாரும் கனிசியஷ், நிறஞ்சனா, ரீனா, பிரசன்னா, பிரவீனா, பிரதாப், ஜொனி, சஞ்சீவன், ரதேஷன், அனோஜன், கிறிஸ்ரின், ஆகியோரின் பேர்த்தியும் லவப்பிரியன், கம்சத்வனி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (04.10.2008) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 23, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
அன்ரன் மகேசன்
(மருமகன்)

## தசாக கிரக யஞ்ச அழைப்பு

### சிவஸ்ரீ.சிவகடாட்ச குருக்கள் சிவகுகராஜக் குருக்கள்

(பிரதம குரு, ஸ்ரீ தெட்சண கைலாயம், திருக்கோணேஸ்வரம்)



### ஆத்ம சாந்திக் கிரியைகள்

நிகழும் சர்வதாரி வருடம் புரட்டாதி மாதம் 21ஆம் திகதி (21.09.2008) தமிழுக்கு 5ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அபரபட்ச சப்தமி திதியில் கோணநாதப் பெருமாள் திருவடி நிழலை எய்தினார்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக புரட்டாதி மாதம் 17ஆம் நாள் இன்று (03.10.2008) வெள்ளி கிரகயக்ஞம் இடம்பெறும்.

இன்று (03.10.2008) நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மதிய போசனம்: திருக்கோணேஸ்வர ஆலயஅன்னதான மண்டபத்தில் நடைபெறும்.

குடும்பத்தினர்,
திருக்கோணேஸ்வரர் ஆலயத்தினர்
அறங்காவலர் சபையினர்.

தொ.பே. 0776646343

## யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

(ஐயர் பாடசாலை)

பிரம்மஸ்ரீ முருகேசு ஐயர் - வெங்கடாசல ஐயர் (ஸ்தாபகர்)

### திருவுருவச் சிலை திறப்பு விழா

காலம் : இன்று (03.10.2008) வெள்ளிக்கிழமை காலை 9 மணி

தலைவர்:
திரு.சு.சண்முககுமார் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்.)
அவர்களால் திருவுருவச் சிலை திரை நீக்கஞ் செய்து வைக்கப்படும்.

சிறப்பு விருந்தினர்:
திரு.கே.வி.குணசேகரம்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)

பழைய மாணவர்கள், முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றியறிதலுடைய
பாடசாலைக் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையால் சிறுவர்தின விழா நேற்று வியாழக்கிழமை நகரசபை கேட்போர்கூடத்தில் நடத்தப்பட்டது. முன்பள்ளி மாணவி லக்சிதா மனோரஞ்சன் மங்கல விளக்கேற்றுவதையும் - சிறுமி ஒருவருக்கு நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் பரிசில் வழங்குவதையும் முதலிரு படங்களிலும் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

# ஒழுக்கமும் நற்குணமும்தான் வாழ்வின் முதற்படி இப்பண்புகளை வளர்ப்பது பாடசாலைக் கல்வி

## பரிசில்தின நிகழ்வில் யாழ்.கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர்

யாழ்ப்பாணம், ஒக்.3

ஒழுக்கமும் நற்குணமும்தான் வாழ்வின் முதற்படி. இப்பண்புகளை வளர்ப்பது பாடசாலைக் கல்வி. இவ்வாறு தெரிவித்தார் யாழ் கல்வித்திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிசில் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பாடசாலையொன்றின் வளர்ச்சியில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கூட்டிணைவு முக்கிய பங்கை வகிக்கிறது. இவ்வளர்ச்சியில் இவர்கள் அயராது பாடுபட வேண்டும். ஒரு பாடசாலையின் பௌதீக வளர்ச்சியில் திணைக்களம் எவ்வளவு உதவி புரிந்தாலும் அதனைப் பேணிப் பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு அந்தப் பாடசாலையின் முழுச் சமூகத்தையும் சார்ந்தது. இதனடிப்படையிலே தொடர்ந்து வளங்களை வழங்குவது தங்கியுள்ளது.

பெற்றோர்கள், மாணவர்கள் மீது கூடிய அக்கறை செலுத்துவதன் மூலம் அவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக செல்வதை உறுதிப்படுத்தலாம்.

யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் தற்போது கீழ்நோக்கிச் செல்கின்றது. அதை நிவர்த்திசெய்ய இப்போதே அதிக சிரத்தை எடுக்க வேண்டும்.

கல்வியை இழப்போமாயின் செல்லாக் காசாக மாறவேண்டிய நிலைக்கு எமது சமூகம் தள்ளப்பட்டுவிடும். இதனூடாக சமூக அடித்தளம் கீழ்நிலைக்குச் செல் லும் நிலை ஏற்படும். இதனை எமது சமூகத்தின் ஆர்வலர்கள்தான் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள முடியும்-என்று தெரிவித்தார்.

நாட்டு நிலையைக் காரணங்காட்டி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பின்னிற்கக்கூடாது. 'யாழ்ப்பாணம் கல்விக்கு பெயர்போன இடம்' என்ற பழைய பாரம்பரியத்தை மீண்டும் நிலைநாட்ட அனைவரும் பாடுபட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினரும் யாழ் மாநகர சபை படவரைஞரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் பேரவை உறுப்பினருமாகிய எஸ்.எக்ஸ். குலநாயகம் தனதுரையில்:-

சிறுவர்கள் மன அழுத்தமின்றி வாழ்வதன் மூலமே அவர்களின் பிஞ்சுமனங்களில் நல்ல சிந்தனைகள் பிறக்க வழியேற்படும். அந்தவகையில் அவர்களை மகிழ்ச்சியாக வளர்ப்பது பெற்றோர், ஆசிரியர்களின் முக்கிய கடமையாகும்.

குறிப்பாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எத்தனையோ நல்ல குழந்தை உள்ளங்களை சிதைத்து வருவது கண்கூடு. அந்தவகையில் இப்பரீட்சை அவசியமற்றது, தேவையற்றது. மாற்றுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

முதலிடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (72-201)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மந்திகை மரக்கறிச் சந்தை நாளைமுதல் தற்காலிக இடத்தில் இயங்கவுள்ளது

## இதற்கான புதிய கட்டடம் விரைவில் அமைக்கப்படும்

வடமராட்சி, ஒக்.3

மந்திகை மரக்கறிச்சந்தை நாளை சனிக்கிழமை தொடக்கம் புதிய இடத்தில் தற்காலிகமாக இயங்கவுள்ளது.

இச்சந்தையை புதிதாக நிர்மாணிக்கும் பொருட்டு தற்போதைய சந்தை அகற்றப்பட்டுள்ளது. அந்த இடத்தில் சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் புதிய சந்தைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதனால் தற்போதைய சந்தைக்கு எதிர்ப்புறத்தில் உள்ள தனியார் காணி ஒன்றில் பருத்தித்துறை பிரதேச சபையினால் தற்காலிக சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தற்காலிக சந்தை நாளை சனிக்கிழமை முதல் இயங்கத் தொடங்கும்.

இதேவேளை தற்போதைய மரக்கறிச் சந்தை வளாகத்தில் உள்ள மீன்சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகள் அதே இடங்களில் தொடர்ந்து இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மரக்கறிச் சந்தையின் கட்டுமானப் பணிகள் மூன்று மாத காலத்துக்குள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுவதாக பருத்தித்துறை பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (203-207)

## கைதடி முதியோர் இல்லத்தில் இன்று இடம்பெறும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.3

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இல்ல அத்தியட்சகர் என்.இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி, யாழ் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஞானவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கலைநிகழ்வுகளும், சேதுகாவலர் வித்தியாலய மாணவர்களின் இசையும் அசையும், தனி நடனம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (111-204)

## மருத்துவச் சிகிச்சைக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் உதவி

அச்சுவேலி, ஒக்.3

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் எலும்பு மச்சை நோயினால் பீடிக்கப்பட்ட சிறுவனின் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளனர்.

நுணாவிலைச் சேர்ந்த எஸ்.றோயங்குமார் என்னும் சிறுவனுக்கே இந்த உதவு தொகை வழங்கப்பட்டது.

மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஸ சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட போது இந்த உதவு தொகையினை பாதிக்கப்பட்ட சிறுவனிடம் கையளித்தார்.

சிறுவனின் மருத்துவத் தேவைக்கு உதவுமாறு கழகம் விடுத்த வேண்டுகோளையடுத்து பொதுமக்களால் வழங்கப்பட்ட நிதியே சிறுவனுக்கு வழங்கப்பட்டதாக கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (203-207)

## ஒலிபெருக்கி பாவனையால் ஏற்படும் இடையூறு பற்றி அறிவுறுத்தல் விடுப்பு

கோப்பாய், ஒக்.3

ஒலிபெருக்கி பாவனையால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்த்தல் தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர்களால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

அரச அதிபரின் சுற்றுநிருபத்திற்கு அமைய இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

## 'கலைக் காவலர்' விருது மரியசேவியர் அடிகளாருக்கு

யாழ்ப்பாணம், ஒக்.3

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் 75ஆவது ஆண்டு பவளவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்ட போது, திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அருள்திரு.நீ.மரியசேவியர் அடிகளார் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகளைக் கௌரவித்து 'கலைக் காவலர்' என்னும் பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை மாலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் கிறிஸ்தவ விவகார அமைச்சு நடத்தவுள்ள 'இலக்கிய விழா - 2008' இல், தமிழ் இலக்கியத்தினூடாக கிறிஸ்தவத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களான 2007ஆம் ஆண்டுக்கான விருதும் மரியசேவியர் அடிகளாருக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203)

# மீளக் குடியமர பதிவுசெய்தபோதும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை

## மண்கும்பான் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.3

தீவகத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து, மீளக்குடியமர பதிவு செய்தபோதும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உறவினர் வீடு, முகாம்களில் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற இந்த மக்கள் தமது சொந்தக் கிராமத்தில் மீள் குடியேறுவதற்கு சில மாதங்களுக்கு முன் வேலணைப் பிரதேச செயலகம் ஊடாகப் பதிவுகளை மேற்கொண்டபோதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த இடத்தில் பாடசாலை இயங்குகின்றமையால் மாணவர்கள் கஷ்டத்தின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கற்க வரவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள வீடுகளை திருடர்கள் உடைத்துக் கட்டடப் பொருள்களை வேறு பகுதிகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்கின்றமையால், மீண்டும் மக்கள் மீள் குடியேறும்போது புதிதாக வீடுகளை நிர்மாணிப்பது சிரமமாகவிருக்கும் என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மக்களின் பிரச்சினைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர். (204)

## மாதாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது என மாவட்ட சமூகசேவை அலுவலர் ஆ.ஞானவேல் தெரிவித்துள்ளார். (203-288)

# முப்பத்தெட்டு வருடங்களாக திருத்தப்படாத வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.3

கடந்த 38 வருடங்களாக எந்தவிதமான திருத்த வேலைக்கும் உட்படுத்தப்படாத மண்டைதீவு கிழக்கு அம்மன் கோவில் கிழக்கு வீதியை மாரிகாலத்திற்கு முன் திருத்தி, போக்குவரத்துக்கு உதவுமாறு மண்டைதீவு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக இந்த வீதி திருத்தப்படாததால் சைக்கிள்களில்கூட பயணம் செய்யமுடியாத நிலை காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

குடியிருப்புக்கும் தெற்கு பஸ்நிலையத்திற்கும் செல்லும் தனியார் வாகனங்களும் இதனால் வயல் வெளியூடாக பயணிக்கின்றன.

மழைகாலம் ஆரம்பித்ததும் வயல் வெளியில் நீர் தேங்கிவிடும். இதனால் மண்டைதீவு கிழக்கு குடியிருப்புக்கான போக்குவரத்து தடைப்பட்டுவிடும்.

எனவே மாரிகாலம் ஆரம்பிக்கமுன் இந்த வீதியை திருத்தி போக்குவரத்திற்கு உகந்த வீதியாக மாற்றித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை மண்டைதீவு கிராம மக்கள் கோரியுள்ளனர். (203-302)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவியும்
கௌதமன் இராஜலக்ஷ்மி தம்பதியினரின் புதல்வியுமான

**செல்வி கௌதமன் சினேகா**

2008 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 114 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோ டு அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல வதிரி பூவற்கரை பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

'விநாயகர் இல்லம்',
அல்வாய்ப் தெற்கு, அல்வாய்ப்
வதிரி.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, மாமாமார்கள், அத்தைமார்கள், சித்தப்பாமார்கள், சித்திமார்கள், அக்காமார்கள், அண்ணா, தங்கை, மச்சாள்மார்கள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவச் செல்வங்கள்



செந்தில்வேல்
சஞ்சீதகிருஷ்ணா
(140 புள்ளிகள்)



கிருஷ்ணமூர்த்தி
யசிந்தன்
(127 புள்ளிகள்)



தர்சனா
நிருபசெல்வம்
(124 புள்ளிகள்)

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களது வெற்றிக்கு வழிகாட்டி ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம். **பழைய மாணவர் சங்கம்.**

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

# வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. முதலிரு வேலைகளுக்கு இக்ராட் M9 பதிவு பெற்ற ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது. மூன்றாவது வேலைக்கு இக்ராட் பதிவு அவசியமில்லை.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் பத்திர கட்டணம் வற் வரியுடன் |
|---|---|---|
| 1. நூல்நிலையக் கட்டடம் அமைத்தல் கட்டம்-1 சங்கானை | 9000.00 | 1150.00 (1000+150) |
| 2. மீன் சந்தை கட்டடத்திற்கு வலையமைப்பு செய்தல்-சங்கானை | 5500.00 | 1150.00 (1000+150) |
| 3. பழைய நூல் நிலையக் கட்டடம் இடித்து அகற்றல்-சங்கானை | 6100.00 | 1150.00 (1000+150) |

கேள்விப் படிவம் பெறல் :- 15.10.2008 ந.ப 12.00 மணி வரை
கேள்விப் படிவம் ஏற்றல் :- 23.10.2008 ந.ப 12.00 மணி வரை
கேள்வி திறத்தல் :- 23.10.2008 பி.ப 14.00 மணி

மேற்படி கேள்விப்பத்திரத்தின் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
01.10.2008

சு. புத்திசிகாமணி
செயலாளர்.
வலிமேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.





கொமர்ஷல் வங்கியின்

**இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டம்**

உங்களுக்கு ஏற்றவாறு இரு வைப்பு முறைகள்

- மாதாந்தம் (ஆகக்குறைந்தது ரூபா 100/= ஆகக்கூடியது ரூபா 2500/=) - 2 வயதிலிருந்து 5 வயது வரை
- முழுத்தொகை (ஆகக்குறைந்தது ரூபா 1000/= ஆகக்கூடியது ரூபா 117,000/=)

உங்கள் பிள்ளைக்கு 18 வயதில் ரூபா 10 இலட்சம் வரை

உங்கள் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழின் நகல் பிரதியுடன்,
இன்றே அருகிலுள்ள கொ... கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.

*நிபந்தனைகளுக்கு அமைவாக

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் சம்புநாதேஸ்வர ஆலயத்தில் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட பஞ்சமுக சிவலிங்கப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் இடம்பெறுவதையும் மூலஸ்தான கலசத்திற்கு அபிஷேகம் செய்யப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: காந்தன்)



உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றது. கருணாகரப்பிள்ளையார் தேரில் வீதி உலாவரும் காட்சி.

# சித்தம் ஒன்றித் துதிப்போம்

எந்தச் செயலையும் ஈடுபாட்டுடன் செய்தல் வேண்டும். அதில் மனம் ஒன்ற வேண்டும். அப்பொழுதுதான் அச்செயலை நன்கு முடித்து வெற்றி காண முடியும்.

வாழ்வில் துன்பம், துயரம் நீங்கி அமைதியும் நலனும் பெற இறை சிந்தனையும் வழிபாடும் தேவை. பிற சிந்தனைகளின்றி மனமொன்றா இறைவனை நினைக்க வேண்டும்; வழிபடவேண்டும். இப்படி இருந்தால் எமக்கு எந்தக் குறையும் நேராது. இது அப்பர் அடிகள் தரும் அறிவுறுத்தல் 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை.' என்பது அவரின் திருவார்த்தை.

**அடியவருக்கு அல்லல் இல்லை**

## ஞானக்கதிர்

இன்ப, துன்பம் கலந்தது உலக வாழ்வு. இரண்டுமே என்றும் நீடிப்பதில்லை. நாம் பெறும் செல்வமும் இழப்பும் இன்பமும் நோயும் இறப்பும் முன்னரே எம்முடனிருந்து அனுபவத்துக்கு வருகின்றன. ''பேறு இழவு இன்பமொடு பிணி மூப்புச் சாக்காடு என்னும் ஆறும் முன் கருவுட்பட்டது'' என்று சிவஞானசித்தியார் என்னும் சித்தாந்தநூல் கூறுகிறது. இவற்றினால் வரும் இன்பதுன்ப அனுபவங்களின் பின் வாழ்வு முடிகிறது. எடுத்த பிறவியில் இன்பத்தை விட துன்பம் பெரிதாகத் தெரிகிறது. பலவித குறைகளால் மனப் பயம் ஏற்படுகிறது. முடிவில் மரண பயமும் வேதனையும் மேலோங்கிக் கலங்க வைக்கின்றன.

வாழ்வில் உண்டாகும் இத்துன்பியல் நிகழ்வுகளிலிருந்து விடுபடுவதற்கு இறையருளைத் தவிர வேறெதுவும் துணைபுரிவதில்லை. பேரின்பப் பொருளான சிவபரம்பொருளை நாடுவதே ஒரே வழி. சிவனடியாராக இருந்த மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த காலனைக் காலாலுதைத்து அருள் புரிந்தவர் சிவபெருமான். அவருக்கு அடிமைபூண்டு வழிபடுவதால் வாழ்வின் துயரும் பயமும் நீங்கும். இதனை அப்பர் அடிகள் பின்வருமாறு கூறி உணர்த்துகிறார்.

''கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவர்க்காய்''

நாம் பல பிறவிகள் எடுத்து விட்டோம். இனியும் எடுக்கவுள்ளோம். பிறவிகள் எடுக்க முன் உயிர் இருந்த ஒரு தனி நிலை உண்டு. அது கேவலம் எனப்படும். கேவல நிலையில் உயிர் ஆணவத்துடன் சேர்ந்து, தனது ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாமல் இருந்தது. உயிரின் இந்த நிலையை, ''காரிருளில் கண்ணிலாக் குழவி'' போல் இருந்த நிலை என்று தாயுமானவர் விளக்குவார். தன்னையும் அறியாமல், தனக்கு மேலுள்ள தலைவனையும் அறியாமல் உயிர் ஆணவப் பிடியில் இருந்த அவல நிலை இது. இந்த நிலையைப் போக்கி, உயிரை உய்விக்கத் திருவுளம் கொண்ட கருணையே வடிவான இறைவன், உயிருக்குப் பிறவிகள் கொடுக்கின்றான். எடுத்த பிறவிகள் ஒவ்வொன்றிலும் உயிர் செயல் புரிந்து, அனுபவம் பெற்று, அறிவு விளக்கம் பெறுகின்றது. உயிரின் அறிவு சிறிது சிறிதாக விளக்கமுற, அதனைப் பற்றிய ஆவணத்தின் பிடி சிறிது சிறிதாகத் தளர்கிறது. இறுதியில் ஆணவப்பிடியிலிருந்து உயிர் முற்றாக விடுபட்டு இறைவனைச் சார்கிறது: சிவனருளில் தோய்ந்து சிவானந்தத்தை அனுபவிக்கிறது.

# 9 மணித்தியாலங்கள்30 நிமிடம் தொடர்ந்து பேசி சாதனை படைத்தார் அழகு ஜெகதீஸ்வர தேசிகர்

தொடர்பேச்சுச் சாதனையாளர்களாக, 1960ஆம் ஆண்டு கியூபா பிரதமர் பிடல் கஸ்ரோ ஐக்கிய நாடுகள் சபையில் 4 மணித்தியாலமும் 29 நிமிடமும் சோகல்லோ சண்முகம் கொழும்பு, வெள்ளவத்தை பெண்கள் ஆய்வு நிறுவன மண்டபத்தில்



7 மணித்தியாலங்களும் தொடர்ந்து உரையாற்றிச் சாதனை படைத்துள்ளனர்.

இவர்களுக்கு அடுத்த படியாக கடந்த வருடம் (2007.09.01) அல்வாய் கேதீஸ்வரம் ஆலய முன்றலில் காலை 8 மணி ஒரு நிமிடத்திற்கு உரையாற்ற ஆரம்பித்து மாலை 5 மணி 10 நிமிடத்திற்கு முடித்து 9 மணித்தியால தொடர் பேச்சாளர் என்ற சாதனையை நிலை நாட்டியிருந்தார் வடமராட்சியைச் சேர்ந்த சிவஸ்ரீ அழகுஜெகதீஸ்வர தேசிகர்.

அவரது சாதனை மீண்டும் அவராலேயே கடந்த 28.09.2008 அன்று முறியடிக்கப்பட்டுள்ளது. 9 மணித்தியாலயமும் 30 நிமிடங்களும் உரையாற்றி தனது சாதனையை அவர் மேலும் வலுப்படுத்தியுள்ளார்.

கடந்த 28.09.2008 அன்று கம்பர்மலை வித்தியாலயத்தில் இந்த சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளது.

கனடாவில் வசிக்கும் சிறுநீரகம் பாதித்த ஒருவரின் வைத்தியச் செலவுக்குத் தேவையான நிதியை சேகரிக்கும் நோக்குடன் இந்தச் சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கிராம சேவையாளர் வி.கேசண்முகநாதன், கலாசாரப் பேரவை அபிவிருத்தி அலுவலர் எஸ்.ரூபகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், கம்பர்மலை வித்தியாலய அதிபர் சு.கிருஷ்ணகுமார், வல்வெட்டி இ.த.க.பாடசாலை அதிபர் எஸ்.தர்மகுலசிங்கம், வல்லை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சோ.தண்டபாணிக தேசிகர் மற்றும் பொது மக்கள் முன்னிலையில் 'கல்வி உலகின் மகத்தான சாதனை' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

காலை 7.45 மணிக்குத் தனது தொடர் உரையை ஆரம்பித்து மாலை 5.15 மணிக்கு உரையை முடித்துச் சாதனை படைத்தார்.

இந்தச் சாதனையாளரிடம் உரையாடிய போது அவர் தெரிவித்ததாவது:

வேத,புராண இதிகாசங்களை கற்கும் வசதிகள் எனக்கு இருந்தமையால் அவற்றைக் கற்றுக் கொண்டதுடன் கல்வியிலும் சிறந்து பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியானேன்.

தற்போது ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றேன். சமயச் சொற்பொழிவு, புராணச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி வருகின்றேன்.

மேற்படி நிகழ்வுகளை நான் பல மணி நேரம் தொடர்ச்சியாகச் செய்துவந்தமையால் தொடர்உரை சாதனையை செய்தால் என்ன என்னும் வினா என் மனதில் உதிக்கத் தொடங்கியது. கடந்த வருடம் 'மகாபாரதம்' என்னும் தலைப்பில் 9மணி நேரம் உரையாற்றி சாதனை படைத்தேன். இப்போது 'கல்வி உலகில் மகத்தான சாதனை' என்னும் தலைப்பில் 9 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் தொடர்ச்சியாக உரையாற்றி ஏனைய சாதனைகளை முறியடித்துள்ளேன்.

இந்தச் சாதனை மூலம் நாட்டுக்கும், மக்களுக்கும் பெருமை சேர்ப்பதே எனது நோக்கம். அத்துடன் மக்களுக்கு உதவ வேண்டும் என்பதும் எனது குறிக்கோளாகும்.

இந்த உதவும் மனப்பான்மை காரணமாகவே கனடா ரொன்ரோவில் உள்ள- சிறுநீரகம் பாதித்த- இலங்கையைச் சேர்ந்தவரான அ.ஸ்ரீதரன் ஐயாவிற்கு உதவும் நோக்கத்துடன் இந்தச் சாதனை நிகழ்வில் நிதி சேகரிப்புச் செய்துள்ளேன்.

இந்த நிதியை அவரின் வைத்திய செலவுக்கு நேரில் சென்று வழங்கவுள்ளதுடன் அங்கும் 'இந்து சமயத்தின் முத்துக்கள் மூன்று' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளேன்- என்றார்.

**நேர்காணல்: வல்லழகனார்**

## கோப்பாயில் சுயதொழில் பயிற்சி

கோப்பாய், ஒக்.3

கோப்பாய் 'விதாதா' வன நிலையத்தில் கணனி இணையத்தள பயிற்சி நெறிக்கு மூன்றுபேரும் மெழுகுவர்த்தி தயாரிப்பு, சந்தனக்குச்சி தயாரிப்பு ஆகிய பயிற்சி நெறிகளுக்கு இருபது பேரும் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவில் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்பட்டு எதிர்வரும் வாரத்தில் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-72)

## கோண்டாவில் இந்து ம.வியில் ஸ்தாபகர் உருவச் சிலை திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஸ்தாபகர் திருவுருவச் சிலை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] வேதநாயகம் கலந்து கொண்டு திருவுருவச் சிலையைத் திரை நீக்கம் செய்து வைப்பார் (203)

## நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.3

பொலிகண்டி கிழக்கு கிராமிய அபிவிருத்திச் செயலகத்தின் ஆதரவோடு பொலிகை இளைஞர்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பொலிகண்டி கிழக்குக் கிராமிய அபிவிருத்திச் செயலகத்தில் நவராத்திரி கலைவிழாவினை நடத்தவுள்ளனர்.

கி.அ.தில்லைதாசன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர் செ.சின்னையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் வீ.துரைசிங்கம், ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் சி.இராசகுரு, ஓய்வுபெற்ற தபாலதிபர் சு.கந்தசாமி, க.பரராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (70-201)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.அபிவிருத்தி மன்றத்தினர் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நவராத்திரி பூசையினை கொண்டாடவுள்ளனர்.

பணியாளர், பணிப்பாளர், கழக அங்கத்தவர் அனைவரும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. மேற்படி கழக உறுப்பினர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் சமூக அபிவிருத்தி மன்றச் செயலாளர் தெரிவித்துள்ளார். (201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வாணி விழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு தலைவர் சி.சிந்துஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் மு.பாலமுருகன் விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு நிகழ்வாக 21 வருடங்களாக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் இந்து மன்றத்தை வழிநடத்தி வந்த வே. பூபாலசிங்கத்திற்கு பாராட்டு நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து வருடாந்த நூல் வெளியீடான ''ஞான ஒளி'' நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன. (107-201)

★ ★ ★

குருநகர்,ஒக்.3

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நவராத்திரி விழா எதிர்வரம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைச பணிப் பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன தலைமையில் நடைபெறவுள்ளது. (203-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்காத நினைவில்

## ஐந்தாம் ஆண்டு

செல்வி

**அரியகுணராசா கார்த்திகா**

மலர்வு: 16.08.1981

உதிர்வு: 03.10.2003

நெஞ்சிருக்கும் வரை
உன் நினைவிருக்கும்
அந்த நினைவில் உன் பூ முகம்
சிவந்தே சிரிக்குதம்மா!
உன் பிரிவால் தவிக்கின்றோம்
உன் நினைவினில் வாழ்கின்றோம்.

அம்மா, ஆசையம்மா,
அக்கா, அத்தான்.
ஒராங்கட்டை,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

(சி/554876)

# 7ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் தொண்டர்

**கந்தையா திருநாவுக்கரசு**

(சிவயோக சுவாமிகளின் அடியவரும், வட இலங்கைச் சர்வோதய ஸ்தாபகரும், ஜீவதானியும்)

மண்ணுக்காக: 01.03.1939
விண்ணுக்காக: 03.10.2001
03.10.2008

''யாதூ ஊம் மூரே யாவரும் கேளிர்''
''எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்
மக்கள் இனமீன்ற தமிழ் நாடு தனக்கும்
என்னால் தினையளவு பயனேதும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்''

இன்று (03.10.2008) வெள்ளிக்கிழமை வட இலங்கைச் சர்வோதய சேவை வளாகத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவுதின நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வட இலங்கைச் சர்வோதயம்,
புங்குடுதீவு. (78870)

வட இலங்கைச்
சர்வோதயக் குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்



தோற்றம்: 12.08.1946

மறைவு: 03.09.2008

**அமரர் பெருமாள்பிள்ளை சேதுராமன்**

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கினிற் பிறந்து
திருநெல்வேலியிற் சிறந்து வாழ்ந்து
கொழும்புமா நகரிற் சென்று வாழ்ந்திடுங்காலை
எங்கள் அன்புடைய தெய்வம் மறைந்த செய்தி
துயரத்தைத் தந்தபோதும் தம் துயரத்தையும்
நேரிலும் தந்தி, தொலைபேசி மூலமும் தெரிவித்து
அனுதாபம் காட்டிய உற்றார்,உறவினர், நண்பர்கள்
அயலவர்களுக்கும் நன்றி நவில்வதுடன்...

01.10.2008 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு கொழும்பு முகத்துவாரப் புனித தீர்த்தக்கரையில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்றன. இன்று (03.10.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு கொழும்பு கமலாமோடி மண்டபத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.24, நீதிமன்ற வீதி, கொழும்பு –12. தகவல்: இ.சண்முகராசா (மைத்துனர்)
தொ.பே: 011 2470769, 0777636691. (சி/554941) (கண்ணா கமு...)

# சிறுவர்தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

வடமராட்சி,ஒக்.3

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி 'சிறுவர்களுக்கு செவிசாய்ப்பதனூடாக அவர்களின் உலகை மகிழ்ச்சிக்குரிய தாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகமும், சமுர்த்திச் சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தியது.

போட்டிகளில் முதல் 5 இடங்களைப் பெற்றோர் விவரம் வரமாறு:

**ஆரம்பப் பிரிவு**

**பேச்சு:** சி.அன்ரன்சியோவுன் (கலட்டி றோ.க.த.க.பாடசாலை), சி.கேசலா (திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்), சி.சிந்துஜா (திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்), சு.ஆதீஷன் (புற்றளை மகாவித்தியாலயம்), செ.அனோஜ் (வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலயம்).

**கட்டுரை:** பி.சர்மின் (பருத்தித்தறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), இ.ஹர்சிகா (தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை), ச.மதுசுஜா (கெருடாவில் இ.த.க.பாடசாலை), செ.தர்சிகா (துன்னாலை மேற்கு மெ.மி.த. க.பாடசாலை), ஜெ.நிதுஷா (திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்).

**கீழ்ப் பிரிவு**

**பேச்சு:** மு.வெண்ணிலா (வட இந்து மகளிர் கல்லூரி), இ.ஜலனி (தெடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), க.பிரசாந்தி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), றொ.விதுர்ஷன் (கலட்டி றோ.க.ஆண்கள் பாடசாலை), வி.ரஜீவன் (பருத்தித்தறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), ஜெ.பிரியங்கா தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்).

**கட்டுரை:** கோ.மயூரி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), க.ஆர்த்திகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), த.சானுசன் (ஹாட்லிக் கல்லூரி), க.கருணரூபன் (வல்வெட்டுத்துறை சிதம்பராக் கல்லூரி), ச.விதுசன் (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), ச.துஷியா (புலோலி மெ.மி.த.க. பாடசாலை).

**மத்திய பிரிவு**

**பேச்சு:** பு.ஆரணி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), அ.அருள்நிலா (வட இந்து மகளிர் கல்லூரி), அ.கஜேந்தினி (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), ம. இந்துஜா (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), சி.கீர்த்திகா (கொற்றவத்தை அ.மி.த.க.பாடசாலை).

**கட்டுரை:** ச. அஜந்தா (வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரி வித்தியாலயம்), மு.உஷாராணி (பொலிகண்டி இ.த.க.பாடசாலை), சி.சிவநந்தினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), செ.சாருண்ஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சி.லாவண்யா (வட இந்து மகளிர் கல்லூரி).

**கவிதை:** ப.விணோதா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கு.தமிழ்மதி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ம.மேரி தர்சிகா (சென் தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), தே. பாமினி (கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை), ந.வினிதா (தும்பளைசிவப்பிரகாச வித்தியாலயம்).

**மேற்பிரிவு**

**பேச்சு:** க.சிவசுதன் (ஹாட்லிக் கல்லூரி), ஆ.சுமன் (வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி), தே.ஜனனி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), செ.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி), பா. யாழினி (வட இந்து மகளிர் கல்லூரி).

**கட்டுரை:** பெ.கலைவாணி (வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலயம்), க.அனுஷா (வட இந்து மகளிர் கல்லூரி), சி.கவிதா (வட இந்து மகளிர் கல்லூரி), த.அனுஜா (வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி), வே. சாளினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**கவிதை:** மோ. விஜிதினி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.நித்தியா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), க.மாலினி (வட இந்து மகளிர் கல்லூரி), இ.ரமேஸ் (வேலாயுதம் மகாவித்தியாலயம்), ச.சஜீகரன் (ஹாட்லிக் கல்லூரி).

(202-236)


# தங்கம் ரூ.24000 ஆனால் தங்கமெடலோ ரூ.300...!



உலக ஆசிரியர் தினத்தில்
ஆசிரியர்களை கௌரவிக்க,
புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்களைக்
கௌரவிக்க தங்க மெடல்
ஒன்றை வழங்குங்கள்.

மேலதிக விவரங்களுக்கு:

எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
212, கோயில் வீதி, நல்லூர்.
021 222 9607, 0777-110610

(சி/554890)


# பொது அறிவித்தல்

**வலி.தென்மேற்கு பிரதேச சபை**
**ஆதன மீள் மதிப்பீடு- மானிப்பாய் கிராம உப அலுவலகம்**

வலி.தென்மேற்குப் பிரதேச சபை, அதன் மானிப்பாய் கிராம உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களை வெகுவிரைவில் மீள் மதிப்பீடு செய்யத் தீர்மானித்துள்ளதால், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டம், பிரிவு 140, 141 இன் பிரகாரம் எமது உத்தியோகத்தர்கள் நடைமுறையிலுள்ள ஆதனங்கள் தொடர்பாக, பட்டியல் ஒன்றினை தயாரிப்பதன் பொருட்டு ஆதனங்களுக்கு 03.10.2008 ஆம் திகதி முதல் வருகை தரும்போது அவ்வாதனங்களின் உரிமத்தைச் சான்றுப்படுத்துவதற்கான ஆவணங்களை (உறுதிகள்/தோம்புகள்) தயார் நிலையில் வைத்திருக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளர்,
வலி.தென்மேற்குப் பிரதேச சபை,
மானிப்பாய்.

30.09.2008

(சி.554949)

# முகவரி தொலைந்து 3 ஆம் ஆண்டு



செல்வி **தனுஷா மாதவராஜா**

(2ஆம் வருட கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)

எழுகதிராய்: 04.08.1984

உதிர்மலராய்: 07.10.2005

திதி: சதுர்த்தி
03.10.2008

கானமயிலாட கார் முகில்கள் திரண்டு நிற்க
வானம் மலர் தூவி, புவி அன்னை நனைந்த வேளை
நம் உறவுப் பூங்காவில் நறுமணம் வீசிய புது மொட்டே!
''தனு'' என்று வாய் நிறைய நாம் அழைத்த செல்வமே!!
முற்றாத உன் வாழ்வு நம் முற்றத்தில் முழுமையாய்
உதிர்ந்து சருகாகி கணப்பொழுதில் மறைந்ததுவோ!!!

பொ.மாதவராஜா,
அண்ணாவிவளவு,
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம். (78750)

என்றும் மீளா
நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவு

தாயின் மடியில்: 31.12.1948



விநாயகர் அடியிணையில்: 15.10.2007

**அமரர் அப்புத்துரை குணசேகரன் (பபா)**

(சிறைச்சாலை அத்தியட்சகர் (S.P) மட்டக்களப்பு, சமாதான நீதிவான், கொழும்பு மாவட்டம்)

திதி: சதுர்த்தி

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம்மனசு
ஆண்டவன் அழைப்போ என்றிட .
ஆறுதல் தந்திடுவார் யாரும் இல்லாக்
குணம் போல் சேர்ந்திட ஒரு சேகரன்
இப்பதி சேருவான் என்று எண்ணிட
உன் நினைவு ஓராண்டாய் உருண்டிட
உன் வீரக்கழல் பொருந்திய திருவுருவே!
உள்ளங்களில் நிறைந்து, ஆத்ம சாந்திக்காய் வணங்குகின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (78887)

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கல்விக் கோட்ட உதைபந்தாட்டம்: போராடிச் சாதித்தது சென்.பற்றிக்ஸ்

வலி.வடக்கு,ஒக்.3

யாழ்ப்பாணம் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயமும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஓர் அணி மற்ற அணிக்கு சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் போட்டியாக விளையாடினார்கள். இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப்புடன் மாறி மாறி பந்தை எதிரணியினரின் கோல் கம்பத்தை நோக்கி அடித்தும் நகர்த்திச் சென்றபோதிலும் இரு அணிகளின் பின்னணி வீரர்கள் இம்முயற்சியை முறியடித்து நின்றார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்னணி வீரர் தமக்குக் கிடைத்த பந்தொன்றை சாதகமாகப் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்று முன்னணியில் நின்றவேளையில் முதல்பாதி ஆட்டம் நிறைவுபெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்குமே முக்கியமானதாகக் காணப்பட்ட நிலையில் புத்துணர்வுடன் இரு அணிகளும் மோதிக்கொண்டன. இரு அணிகளுமே கோல்களைப் பெறவேண்டும் என்ற வேகத்துடன் மோதிக்கொண்ட நிலை யில் சென்.ஜேம்ஸ் வீரர் ஒருவர் தனக்குக் கிடைத்த பந்தை உரிய முறையில் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்று ஆட்டத்தைச் சமப்படுத்திக்கொண்டார்.

தொடர்ந்து இரு அணிகளும் கோல்கள் பெற கடும் முயற்சியை எடுத்தபோதிலும் அது கைகூடாத நிலையில் போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்குச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 4:3 கோல்கள் கணக்கில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்றுக் கோட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (1-86)

# புலோலியில் நாளை முன்பள்ளி விளையாட்டு விழா

மந்திகை,ஒக்.3

புலோலி வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வரும் அன்பு மலர்கள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இவ்விழாவிற்கு யாழ். பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஸ்ரீ.ரூபறஜனி தலைமை தாங்குவார். பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. முருகையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (1-218)

## பாடசாலைகள் வலைப்பந்தாட்டம்

# யாழ்.இந்து மகளிரும் கொக்குவில் இந்துவும் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம்,ஒக்.3

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையின் புத்தாண்டுப் பூர்த்தியை ஒட்டி நடத்தப்பட்டுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மோத யாழ்.இந்து மகளிர் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் தகுதி பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் புனித கன்னியர்மடம் பாடசாலைக்கும் இடையே இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வெற்றிபெற்று இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

இரு அணியினரும் ஓர் அணிக்கு மற்ற அணி சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் மோதிக்கொண்டமை கண்ணுக்குப் பெரும் விருந்தாக அமைந்திருந்தது.

முதல்பாதி ஆட்ட நிறைவின்போது புனித கன்னியர்மடம் பாடசாலை 14, யாழ்.இந்து மகளிர் கல்லூரி 11 புள்ளிகள் என்ற அடிப்படையில் நின்றன.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியினர் தனது திறமையைக் காட்டத் தொடங்கி புள்ளிகளைப் பெறத் தொடங்கினார்கள். இரண்டாம் பாதி ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி 12, புனித கன்னியர்மடம் 7 புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

ஆட்ட முடிவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி 23:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் புனித கன்னியர்மடம் பாடசாலையை வெற்றிபெற்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் உரும்பிராய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டதில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (1-86)

# சண்டிலிப்பாய் கோட்ட தாச்சி இறுதியாட்டத்தில் பெரியவிளான் வென்று கேடயம் சுவீகரித்தது

வலி.வடக்கு,ஒக்.3

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஆரம்பப்பிரிவு ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டியில் பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் அரசாங்க தமிழ்க்கலவன் பாடசாலையும் பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவ்ன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

முதலில் பழம் பெறத் தொடங்கிய சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 4 பழங்களைப் பெற்றுக்கொண்ட நிலையில் அவர்களின் நேரம் பூர்த்தியடையத் தொடர்ந்து பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 5 பழங்களைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் கட்டுடை சைவ வித்தியாலயமும் பண்டத்தரிப்பு சாந்தை சிற்றப்பலம் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இப்போட்டியில் மானிப்பாய் கட்டுடை சைவவித்தியாலயம் 6:2 பழங்கள் என்ற அடிப்படையில் சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயத்தை வெற்றி பெற்று 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)

## 20/20 கிரிக்கெட் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பாடசாலைகளுக்கிடையில் முதல் தடவையாக நடத்தும் 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டையில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்-

* கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம் -

* யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. (1-86)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடத்திய மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளைப் பாராட்டும் நிகழ்வு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நீளம் பாய்தலில் தேசிய மட்டத்தில் சாதனை ஏற்படுத்திய அன்ரன் ஜெயராஜ் அன்ரன் ரஜிம்ராஜுக்கு பதக்கம் அணிவிப்பதையும் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் சிவலிங்கம் ஹரிதரனுக்குச் செயலாளர் கு.பாலகிருஷ்ணன் பதக்கம் அணிவிப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

பொலனறுவையில் இருந்து எடுத்துவரப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைக்கான வெற்றிக்கிண்ணத்தை சாதனையாளர் அன்ரன் ரஜிம்ராஜ், நிர்வாக அலுவலர் ப.குகராஜனிடம் கையளிப்பதை மூன்றாவது படத்தில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

# மாகாண மட்டத்தில் தங்கப்பதக்கம்



வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவி செல்வி யசோதா சந்திரசேகரம் வடக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ஈட்டி எறிதல், தட்டெறிதல் 17 வயதுப் பிரிவு போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தை வென்று சாதனையாளரா கியுள்ளார். இப்பாடசாலை அதிகஷ்டப்பிரதேசத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (1-55)




# 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டியில் முதலிரு இடங்ளைப் பெற்ற அணிகள் தெற்குக்கு!

## முதலாவது ஆட்டம் அனுராதபுரத்தில் இன்று

வலி.வடக்கு,ஒக்.3

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினல் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற கல்லூரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை தென்னிலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளன.

யாழ்.மாவட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் இரண்டாம் இடத்தைப் பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரியுமே யாழ். மாவட்டத்தில் இருந்து சென்ற பாடசாலைகளாகும்.

இப்பாடசாலைகளின் அணிகள் கப்பல் மூலம் தமது பயணத்தை சமூக சேவைகள் அமைச்சின் உதவியுடன் மேற்கொண்டுள்ளார்கள்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அனுராதபுரத்தில் இன்று தமது முதலாவது போட்டியில் விளையாடவுள்ளது. (1-86)

# யாழ்.விளையாட்டு விழா இன்றும் நாளையும் முன்னைய சாதனைகள் முறியடிக்கப்படுமா?

வலி.வடக்கு,ஒக்.3

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள் இன்றுவரை முறியடிக்கப்படாது இருக்கின்றன. அவை இம்முறை முறியடிக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

சாதனைகள் விவரம் வருமாறு:

### ஆண்கள் பிரிவு

* 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தை சேர்ந்த ரி.ஆர்.எஸ். மிஸ்கின் 100 மீற்றர் தூரத்தை 11.2 வினாடியில் ஓடிய சாதனை.
* 1975ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இ.திருநாவுக்கரசு 1500 மீற்றர் தூரத்தை 4:20:2 வினாடியில் ஓடிய சாதனை.
* 1981ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இ.திருநாவுக்கரசு 5000 மீற்றர் தூரத்தை 16:26:0 வினாடியில் ஓடிய சாதனை.
* 1984ஆம் ஆண்டு வேலணைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.சண்முகம் பிள்ளை 10000 மீற்றர் தூரத்தை 35:16:0 வினாடிகளில் ஓடிய சாதனை.
* 1977ஆம் ஆண்டு கரவெட்டிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.இராஜசேகரன் முப்பாய்ச்சலில் 13:56 மீற்றர் பாய்ந்த சாதனையும் இதுவரை முறியடிக்கப்படவில்லை.
* பெண்களுக்கான போட்டிகளில் நல்லூர் பிரதேச செயலக வீராங்கனைகளினால் ஏற்படுத்தப்பட்ட 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தை 55.4 வினாடிகளில் ஓடிய சாதனையும் முறியடிக்கப்படவில்லை.

மற்றும் ஆண்களுக்கான 200 மீற்றர் பெண்களுக்கான 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியும் கடந்த 18 வருடங்களாகியும் முறியடிக்கப்படாத சாதனைகளாகக் காணப்படுகின்றன.

ஏனைய சாதனைகள் அனைத்தும் 10 வருடங்களுக்கு உட்பட்டவையாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இலக்கியங்களை எழுதுபவர்களும் தொகுப்பவர்களும் குழந்தைகளின் உளவளர்ச்சிப் படிகளை அறிந்திருக்க வேண்டும்

## தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் கருத்து

குழந்தை இலக்கியங்களை எழுதுபவர்களும் தொகுப்பவர்களும் குழந்தைகளின் உளவளர்ச்சிப் படிகளை அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் படைப்புக்கள் குழந்தை இலக்கிய உலகில் வெற்றிபெறும். இவ்வாறு யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளரான ஈ.குமரன் கருத்துத் தெரிவித்தார்.

தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாடசாலையின் பழைய மாணவர்கள், ஆசிரியர்களின் குழந்தைப் பாடல் தொகுப்பான ''மகாஜனன்'' குழந்தைக் கவிதைகள் வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மழலை இலக்கியங்கள் பிள்ளைகளுக்கு உச்சரிப்புப் பயிற்சியையும் வழங்குவனவாக இருக்க வேண்டும். நல்ல சொற்கட்டும் ஓசையும் இருந்தால்தான் குழந்தைகள் விரும்பிப் படிப்பார்கள் - என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்த் சயனன் தெரிவித்ததாவது, எதிர்வரும் 2010ஆம் ஆண்டிலே எமது பாடசாலை நூற்றாண்டு விழாவைக் கொண்டாட உள்ளது. அவ்விழாவுடன் தொடர்புடையதாகவே இந்நூல் வெளிவருகின்றது. பழைய மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரின் கவிதை, சிறுகதைத் தொகுப்பினையும் விரைவில் வெளியிட உள்ளோம். பாடசாலையுடன் தொடர்பு உடையவர்கள் இவற்றைத் தந்துதவ வேண்டும் - என்று வேண்டுகோள் விடுத்தார்.

**குழந்தைப் பாடல்கள் மாசு ஏற்படுத்தாதவையாக இருக்க வேண்டும்**

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தெல்லிப் பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் ஆறு.திருமுருகன், இன்றைய காலகட்டத்தில் ஆவணப்படுத்தல் என்பது முக்கியமானதாக உள்ளது. எமது முன்னோர்கள் ஆவணப்படுத்தி வைத்த ஏடுகள்தான் பண்டைய மன்னர்களின் வரலாறுகளையும் எமது முன்னோரின் வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொள்ள உதவுகின்றன. அவ்வகையில் மகாஜனக் கவிஞர்களின் குழந்தைக் கவிதைகளை அழிந்து போக விடாமல் தொகுப்பது அரியதொரு வரலாற்று முயற்சி ஆகும். குழந்தைப் பாடல்கள் குழந்தைகளின் சிந்தனையில் மாசு ஏற்படுத்தாதவையாக இருக்க வேண்டும் - என்றார்.

முதற்பிரதியை நூல் தொகுப்பாசிரியர்களில் ஒருவரான மயிலங்கூடலூர் பி.நடராசனிடமிருந்து சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ந.பகீரதன் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் ம.மணிசேகரன், ஓ.கோபாலகிருஷ்ணன், த.தயானந்தன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், ம.பா.மகாலிங்கசிவம் ஆகியோரும் உரையாற்றினர். (202-55)

# இடமாற்றம் பெற்ற ஊழியருக்கு பிரியாவிடை

குருநகர்,ஒக்.3

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவை புரிந்து இளைப்பாறிய மற்றும் இடமாற்றத்தில் சென்ற ஊழியர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பதின்மூன்று ஊழியர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (203-51)

# உயர்நீதிமன்ற உத்தரவை மதித்து வீதித்தடைகளை உடன் அகற்றுக!

## ஐ.தே.கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஒக்.3

கொழும்பில் வீதித்தடைகளை அகற்றுமாறு நீதிமன்றம் விடுத்திருக்கும் உத்தரவை அரசு உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. ஜோன் அமர துங்கவே இந்த வேண்டுகோளை விடுத்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நீதிமன்றம் அண்மைக் காலமாக விடுத்து வரும் உத்தரவை சம்பந்தப்பட்டவர்கள் நிறைவேற்றுவதில் தயக்கம் காட்டுவதையே அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் நீதிமன்றம் திங்கட்கிழமை கொழும்பு, காலி வீதி உட்பட பல இடங்களில் உள்ள வீதித்தடைகளை அகற்றுமாறு உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்பு மிக முக்கியமான ஒன்றாகும். வீதித்தடைகள் மூலம் மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் இத்தீர்ப்பு மூலம் மக்களுக்கு நல்லதொரு நிவாரணம் கிடைத்துள்ளது. மக்கள் இத்தீர்ப்பில் திருப்தியடைந்துள்ளனர். ஆனால், இத்தீர்ப்பை அவமதிக்கும் வகையில் அரச ஊடகமான ரூபவாஹினியும் ஐ.ரி.என்னும் செயற்படுகின்றன.

இது நீதிமன்ற அவமதிப்புச் செயலாகும். இது தொடர்பில் உயர் நீதிமன்றம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது எனத் தெரியாது.

இப்போதைய ஜனாதிபதி மஹிந்த அலரிமாளிகையில் தங்கியிருப்பதனால் தான் காலி வீதியில் வீதித்தடைகளை ஏற்படுத்த வேண்டியேற்பட்டுள்ளது. அவர் ஜனாதிபதி மாளிகையில் தங்கினால் இந்தப் பிரச்சினை ஏற்படாது. ஆகவே, நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (சி)

# இலங்கைக்கு வரிச்சலுகை வழங்க சர்வதேசம் ஏன் பின்னடிக்கின்றது?

## குட்டை அவிழ்க்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக்.3

ஏற்றுமதிச் சலுகையை (ஜி.எஸ்.பி. பிளஸ்) இலங்கைக்கு வழங்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட 27 அம்ச ஒப்பந்தத்தை அரசு மீறியதனா லேயே இப்போது இச்சலுகையை மீண்டும் இலங்கைக்கு வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தயக்கம் காட்டுகிறது என்று ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஆனால் இச்சலுகையை இலங்கைக்கு வழங்குவதற்காக யுத்தத்தை நிறுத்துமாறு ஒன்றியம் இலங்கைக்கு நிபந்தனை விதிக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

ஏற்றுமதி வரிச்சலுகை ரத்தாகும் நிலையில் உள்ளது. இதை மீண்டும் எமக்கு வழங்குவதென்றால் நாம் இலங்கையில் சில இடங்கள் தொடர்பாக விசாரணை நடத்தித்தான் தருவோம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த வரிச்சலுகையைப் பெறுவதற்காக இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமிடையில் 27 அம்ச ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது.

அந்த 27 அம்சங்களையும் இந்த அரசு மீறி விட்டது. அதனால்தான் விசாரணை நடத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகின்றது. இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத்தான் இந்த விசாரணை நடத்தப்படும். இலங்கையில் வடக்கை விட தெற்கில் இப்போது அதிகளவான மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

தமது இயலாமையை மறைக்க அரசு யுத்தத்தைப் பயன்படுத்துகிறது. அரசின் இந்தக் கூற்றில் எந்த உண்மையுமில்லை. - என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# ஊழல் என்றதும் தலையைத் திருப்பிய அரசியல்வாதிகள்: மனம் வெதும்புகிறார் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்

சென்னை, ஒக்.3

ஒரு மேடையில் ஊழல் ஒழிப்பு பற்றிய கேள்விக்கு பதிலை சொல்லுமாறு நான் அரசியல்வாதிகளை பார்த்து கூறியபோது, ''அவர்கள் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார்கள்'' - என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் வேதனையுடன் கூறியுள்ளார்.

சென்னையிலுள்ள பாடசாலையொன்றின் நூற்றாண்டு விழா கொண்டாட்ட நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது. இதில், நூற்றாண்டு விழா கட்டடத்துக்கான அடிக் கல்லை திறந்து வைத்து பேசியபோதே கலாம் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் அவர் பேசியவை வருமாறு-

ஆசிரியர்களும், கல்வி கற்பிப்போரும் ஒன்றினை மட்டும் தெரிந்து கொள்ள வேண்டும். கணித மேதை ராமானுஜம், பன்னிரெண்டாம் வகுப்பில் கணிதத்தைத் தவிர அனைத்து பாடங்களிலும் சித்தியடையவில்லை. பாடசாலையில் அவர் சித்தியடையாது விட்டதும், 17 வயதில் கணிதத்தில் சர்வவல்லமை பெற்றிருந்தார். அவரது திறமையைக் கண்ட ஆங்கிலேய அதிகாரி, இங்கிலாந்தில் உள்ள ஹார்டி என்ற மேதையிடம் அனுப்பி வைத்தார்.

ராமானுஜத்தை வெளியுலகுக்கு அடையாளம் காட்டியவர் ஹார்டிதான். இதுபோல், ஒரு மாணவர் பல பாடத்தில் சித்தியடையாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட பாடத்தில் சிறப்பாக இருந்தால் அவரைப் பாராட்டுங்கள்.

3 ஆண்டுகளுக்கு முன்பு, ஆயிரக்கணக்கான மாணவ-மாணவிகள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். அப்போது 10 ஆம் வகுப்பு படிக்கும் பவானி என்ற மாணவி என்னைப் பார்த்து, ''நான் ஊழல் இல்லாத இந்தியாவில் வசிக்க விரும்புகிறேன். அதற்கு என்ன செய்யவேண்டும்'' என்று கேட்டாள்.

அங்கு இருந்தவர்களைப் பார்த்து அதற்கு பதில் தரும்படி கூறினேன். மேடையில் இருந்த அரசியல் வாதிகள் பக்கம் திரும்பினேன். அவர்கள் உடனே முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்கள். நான் அங்கிருந்த மாணவர்களைப் பார்த்து, உங்கள் தாய், தந்தையர் லஞ்சம் வாங்காதவர்களா எனக் கேளுங்கள் என்று சொன்னேன்.

அங்கிருந்த தாய்மார்களை பார்த்து, உங்கள் குழந்தைகள் லஞ்சம் வாங்குவதை விட்டு விடச் சொன்னால் விட்டு விடுவீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ''குழந்தைகள் எங்களை



அந்தக் கேள்வி கேட்டது எங்களுக்கு அவமானம். எனவே, லஞ்சம் வாங்க மாட்டோம்'' என்று உறு தியுடன் கூறினர்.

ஒவ்வொரு மாணவியும் பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் உதவி செய்வேன் என்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் ஊட்டுவேன்; வரதட்சணை வாங்கும் பழக்கத்தை ஒழிக்க தீவிரமாகப் பாடுபடுவேன்; பெண் சிசுக் கொலையை ஒழிக்க உறுதிபூணுவேன் என்று உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும் - என்றார்.

## விலங்கு விசர் நோய் எதிர்ப்பு - நீங்கள் அறிந்து கொள்ளவேண்டியவை

6ஆம் நாள்

### விலங்கு விசர் நோய்க்கான ஆபத்தும் கடியின் தன்மையும் தடுப்பூசிக்கான நிபந்தனைகள்

- ★ஆபத்துக் கூடிய நிலைமைகளின் போது உடனடியாகவே உரிய முதலுதவியை செய்த பின் வைத்திய ஆலோசனை பெற்று உரிய தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ★ஆபத்துக் குறைவான நிலைமைகளின் போது உரிய முதலுதவியுடன் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதுடன் விலங்கினை 14 நாள்கள் அவதானித்து மாறுபாடான அறிகுறிகள் தென்பட்டால் அல்லது சுகவீனமுற்றால் உடனடியாக உரிய தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

### விலங்கொன்றினால் கடிபட்டால் செய்ய வேண்டிய உடனடி முதலுதவி

- ★காயத்தை நன்றாக 5 நிமிடம் வரை ஓடும் நீரில் கழுவவும்.
- ★பின் சவர்க்காரமிட்டு நீரினால் கழுவவும்.
- ★தொற்று நீக்கியை பாவித்து துடைக்கவும்.
- ★இயன்றளவு விரைவாக வைத்திய ஆலோசனையுடன் தடுப்புமருந்தை உரிய ஒழுங்கில் பூரணமாகப் பெறவும்.

# லேமன் சகோதரர்கள் நிறுவனம் 215 கோடி டொலருக்கு விற்பனை

நியூயோர்க், ஒக்.03

அமெரிக்காவில் அண்மையில் திவாலான லேமன் சகோதரர்கள் நிறுவனத்துக்குச் சொந்தமான மற்றொரு நிறுவனம் 215 கோடி டொலருக்கு விற்பனையானது.

லேமன் சகோதரர்களின் துணை நிறுவனமாக செயல்பட்டு வந்தது நியூபெர்கர் பெர்மான். 69 ஆண்டுகளாக இந்நிதி நிறுவனம் செயல்பட்டு வந்தது. தற்போது இத்துணை நிறுவனத்தை பங்குச் சந்தை நிறுவனமான கேபிடல் பார்ட்னர் மற்றும் ஹெல்மன் ஃபிரீட்மென் நிறுவனம் கையகப்படுத்தியுள்ளது. இதற்காக 215 கோடி டொலர் வழங்கப்பட்டுள்ளது.

நியூபெர்கர் பெர்மான் நிறுவனம் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 2,300 கோடி சொத்துகளை நிர்வகித்துள்ளது.

புதிதாக கையகப்படுத்தியுள்ள இந்நிறுவனத்தின் தலைவராக லேமன் சகோதரர்கள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த ஜோர்ஜ் வாக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1939-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் பல்வேறு முதலீடுகளுக்கு ஆலோசனை வழங்கும் 25 ஆலோசனைக் குழுக்களைக் கொண்டுள்ளது. கணக்கியல் மற்றும் பரஸ்பர நிதி ஆலோசனை, பெரு நிதி நிர்வாகம் மற்றும் தனியார் நிதியை நிர்வகிப்பதற்கான ஆலோசனைகள் ஆகியவற்றை வழங்கி வருகிறது.

# கைதடி முதியோர் இல்லத்துக்கு மதிய உணவு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.3

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ளவர்களுக்கு நேற்றுமுன்தினம் மதிய உணவு வழங்கினர்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு முதியோர் இல்லத்தில் சமயச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளதாகவும் கழகச் செயலாளர் லயன் செ.கா. நவரத்தினம் தெரிவித்தார். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வன்னியில் உக்கிரமுறும் வான் தாக்குதல்கள்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான - அவர்களை ஒழித்துக் கட்டும் - போர் முடிவுக்கு வந்துகொண்டிருப்பதாக அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரரான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட அரச தரப்பின் உயர்மட்டப் பிரமுகர்கள் பலரும் கடந்த சில நாள்களாக ஆரூடம் ஒன்றைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் கேந்திர மையமான - அவர்களின் அரச நிர்வாகக் கட்டமைப்புகள் அமைந்துள்ள - கிளிநொச்சி நகர் மீது, படைநகர்வு பெரிய அளவில் தொடங்கப்பட உள்ளதாக அவர்கள் அடிக்கடி அறிவித்து வந்தார்கள்.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு இன்னும் சிறிது தூரமே உள்ளது. எமது படையினர் கிளிநொச்சியின் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். எந்த வேளையிலும் படையினர் உள்ளே செல்லலாம். அடுத்த வாரத்தில் கிளிநொச்சியில் கடும் சண்டை மூளும். இவ்வாறு ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான போர்ப் பேரிகைகளை முழங்கிக் கொண்டிருந்தனர்.

இவற்றுக்கிடையில் இந்த வாரத்தில் கடுமையான தாக்குதல்கள் கிளிநொச்சியை அண்டி நடைபெறப் போவதாக பாதுகாப்பு விமர்சகர்களும் ஆரூடம் கூறியிருந்தனர்.

அந்தவாறே கிளிநொச்சியில் அரசு பெரும் தாக்குதலைத் தொடங்கி விட்டதாகக் கருதலாம். விடுதலைப் புலிகளின் முகாம்களையும் முக்கிய தளங்களையும் விமானக் குண்டுவீச்சு மூலம் அழித்து வருவதாக அரசாங்கத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் கடந்த சில நாள்களாக கிளிநொச்சியில் விமானத் தாக்குதல்களால் மரணமுறுவோரும் காயப்படுவோரும் பொதுமக்களாகவே இருக்கின்றனர்.

விமானக் குண்டு வீச்சுகளில் பொதுமக்களின் வீடுகளும், ஆலயங்களுமே அழிவதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவை மட்டுமன்றி சர்வதேசத் தொண்டர் அமைப்புகளின் அலுவலகங்களுக்கு சிறிது தொலைவிலும் வைத்தியசாலை போன்ற மனிதாபிமான, மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களுக்குச் சற்றுத் தொலைவிலும் குண்டுகளும், குண்டுச் சிதறல்களும் விழுகின்றன.

கிளிநொச்சியில் ஏ-9 வீதியில், 55ஆம் கட்டையில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகத்திற்குச் சற்றுத் தொலைவில் குண்டு விழுந்திருக்கின்றது. கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கு சற்றுத் தொலைவில் போடப்பட்ட குண்டுகளின் சிதறல்கள் ஆஸ்பத்திரியின் யன்னல் கண்ணாடிகளை நொறுக்கியுள்ளன.

இத்தனைக்கும் மேற்படி இரண்டு நிறுவனங்களும் தாம் மனித நேயப் பணியை மேற்கொள்ளும் நிறுவனங்கள் என்பதனைத் துலாம்பரமாக - தெளிவாக - தெரியக்கூடியதாக கட்டடக் கூரைகளில் தமது குறிகளை இட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

போர் வேளைகளில் மேற்படி நிறுவனங்கள் தாக்கப்படக் கூடாது, விமானத் தாக்குதல் நடத்தப்படக் கூடாது என்பதற்கான குறியீடுகளே அவை. இது சர்வதேச விதிமுறையுமாகும்.

இவற்றின் மீது தாக்குதல் நடத்துவது எமது நோக்கமல்ல; வேறு இடத்தைக் குறிவைத்து நடத்திய தாக்குதலில் அவை பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று கூறுவதும் எந்த வகையிலும் பொருந்தாது.

போரால் மக்களோ, மக்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களோ எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை அதில் ஈடுபடும் இரண்டு தரப்புகளும் கவனத்தில் எடுத்து நிதானமாகச் செயற்படுவது அவசியம்; உறுதிப்படுத்துவது பிரதான தேவையாகும்.

அதுவும், விமானத் தாக்குதல் நடத்த உத்தேசித்துள்ள அமைவிடங்கள் வரைபடங்கள் துல்லியமாகக் கண்டறியப்பட்டே அவை நடத்தப்படுவதாக அரசு கூறுவது வழமையான வாய்ப்பாடு. அவ்வாறிருக்க தாம் இலக்கு வைத்து - குறிபார்த்து - தாக்குதல் நடத்தும் இடங்களை நுட்பமாக இனங்கண்டு தாக்கும் நவீன வசதிகள் இலங்கை விமானப் படையிடம் இல்லாதிருக்க முடியாது.

ஆகையால், விமானப்படையின் தாக்குதல்களால் பொதுமக்களின் வாழ்விடங்களும், பொது இடங்களும் வைத்தியசேவை போன்ற அத்தியாவசிய மற்றும் மனிதாபிமான சேவைகளில் ஈடுபடும் நிறுவனங்களும் சேவைகளும் பாதிப்புறுவதை அல்லது தடைப்படுவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

செஞ்சிலுவை, உலக உணவு நிறுவனம், வைத்தியசாலை போன்ற இடங்கள் விமானக் குண்டு வீச்சால் பாதிப்படைவது, அவற்றின் சேவைகளை தடைபண்ணும் நோக்குடன் விடுக்கப்படும் எச்சரிக்கையா? இத்தகைய சந்தேகம் எழுவதை அரசு தடுக்க இயலாது; மழுப்பவும் முடியாது.

# வன்னியில் பரிதவிக்கும் மக்களை பழிவாங்குவது பௌத்த தர்மமா?

## புதிய ஜனநாயகக் கட்சி கேள்வி

கொழும்பு, ஒக்.3

வன்னிக்குள் பரிதவிக்கும் மக்களைப் பட்டினிபோட்டுப் பழிவாங்கும் செயற்பாடு பௌத்ததர்மமா? பழிவாங்கும் செயற்பாட்டை நிறுத்தி அந்த மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களான உணவு, மருந்து, பால்மா வகைகளை அவசரமாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல்குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னிப் பிரதேசம் மீது நடாத்தப்பட்டு வரும் தரை, ஆகாயத் தாக்குதல்களால் சுமார் இரண்டரை லட்சம் வரையான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகி அல்லற்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும் அவசியத் தேவைகளாக உள்ளன.

குழந்தைகள் பால்மா இன்றித் தவிக்கின்றனர். நோயாளர்கள் உரிய சிகிச்சைகள் கிடைக்காமையால் அவதியுறுகின்றனர்.

மக்கள் மரங்களின் கீழும், வயல் வெளிகளிலும், காடுகளிடையேயும் அன்றாட வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக உணவையும் மருந்தையும் ஆயுதங்களாகப் பயன்படுத்துவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும்.

வன்னி மக்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்கும் செயற்பாட்டை அரசு உடன்நிறுத்தி அவர்களுக்குரிய அத்தியாவசிய உணவு, மருந்து, பால்மா என்பனவற்றை அவசரமாக அங்கு அனுப்பிவைக்க வேண்டும்.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதிலும் வன்னியை மீட்பதிலும் யுத்தம் முனைப்பாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் அதனை நியாயப்படுத்துவதில் முழுமூச்சாக உள்ளனர்.

பௌத்த தர்மம் பேசும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இந்த மனித அவலம் பற்றி அக்கறை காட்டாது இருந்து வருகின்றனர்.

வன்னிக்குள் பரிதவிக்கும் தமிழ் மக்கள்இந்நாட்டுப்பிரஜைகள்இல்லையா? அவர்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்க நிற்பதனை ஜனநாயகம் என்பதா அல்லது பௌத்த தர்மம் எனக் கொள்வதா? மகிந்த சிந்தனை என்பது இன்று யுத்த சிந்தனையாகி நிற்பதையே காணமுடிகின்றது.

எனவே, வன்னி மக்கள் படும் அவலம் நீக்கவென ஊருக்குப் பெயருக்காக ஒரு சில லொறிகளில் குறைந்தளவு உணவுப்பொருள்களை அனுப்பாது அம்மக்களுக்குத் தேவைப்படும் போதிய அத்தியாவசிய உணவு மருந்து வகைகளை அனுப்ப அரசாங்கம் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றோம் - என்றுள்ளது.

## பெண்கள் அபிவிருத்திக்காகச் செயற்பட்டமைக்கு சரோஜா சிவச்சந்திரனுக்கு 'மன்தன்' விருது

தகவல் தொழில் நுட்பத்துறையில் புதிய பரிமாணங்களினூடாக கிராமியப் பெண்கள் மத்தியில் தகவல் தொழி நுட்ப முறைகளைப்புகுத்தி, தரவுகள் சேகரிக்கும் புதிய திட்டத்தை வழி நடத்தி செயற்படுத்தியமைக்காக மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரனுக்கு 'மன்தன் விருது - 2008' வழங்கப்படுகிறது.

போர் நடைபெறும் பிரதேசங்களில் ஏற்படும் பாதிப்புக்கள் பெண்களையும் சிறுவர்களையுமே அதிகமாகப் பாதிக்கின்றது. இடப்பெயர்வுகளால் பெண்கள் பலவிதமான துன்பங்களோடு வன்முறைகளையும் எதிர்கொள்கின்றனர். இந்நிலமைகளை கருத்திற்கொண்டு, ஒரு பாரிய தரவுரீதியான மதிப்பீட்டைப் பெறுவதற்காக மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாண மாவட்டத்தைமையமாகக் கொண்டு வன்முறைகளினால் பாதிக்கப்படும் பெண்களின் தரவுகளைத் தகவல் தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்திப் பெற்று அதனை கணனியில் பதிவு செய்யும் திட்டத்தை 2006ஆம் ஆண்டில் இருந்து செயற்படுத்த ஆரம்பித் தது. இத்திட்டத்திற்கு உரிய நிதி யுதவியினை ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தகவல் தொழில் நுட்ப முகவர் நிலையமே வழங்கியது.

தகவல் சேகரிப்பதற்காக யாழ்.மாவட்டத்தில் 5 பிராந்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை சேகரிக்கப்பட்ட பதிவுகள் 886 ஆக உள்ளது. இத்திட்டம் 2008 டிசம்பரில் முடிவடையவுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பல சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த முடிவதோடு, தரவுகள் தேவை யான நிறுவனங்களும் இவற்றை பயன்படுத்திக் கொள்ள இத்திட்டம் உதவியளித்துள்ளது.

புதுடில்லியில் இம்மாதம் 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை நடைபெறவுள்ள தகவல் தொழிநுட்ப மாநாட்டில் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

இம்மாநாட்டிற்கு இந்தியாவின் 57 மாநிலங்களிலிருந்து, தென்னாசியாவின் 6 நாடுகளிலிருந்தும் சிறந்த தகவல் தொழில் நுட்பத்துறைசார் நிபுணர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட திருமதி சரோஜா சிவச்சந்திரன் இவ்விருதைப் பெறுவதற்காக விரைவில் புதுடில்லி செல்லவுள்ளார். (50)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஒக்.3

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" ஆத்மீக சஞ்சிகையின் புரட்டாதி மாத இதழ் வெளியீட்டுவிழா இன்று - வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் எஸ்.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், பொலிகண்டி கந்தவனம் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்கள் வெளியீட்டுரையையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் துரை கணேஷமூர்த்தி மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர்.

இச்சஞ்சிகை 128ஆவதுமாதவெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது. (203-236)

## யாழ்.றோட்டறிக் கழகத்தின் விசேட விருந்தினர் தினம்

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.றோட்டறிக் கழகத்தின் விசேட விருந்தினர் தினம் நாளை சனிக்கிழமை கொண்டாடப்படுகின்றது.

உதயன் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய வைத்திய நிபுணர் டாக்டர் பி.லக்ஸ்மன் விருந்தினராகக் கலந்து கொண்டு 'சுகமான வாழ்வுக்கு நலமான இதயம்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 18 | 04.10.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | மு.இ.07.39வரை |
| நட்சத்திரம் : | அனுஷம் |
| | மாலை 06.21 வரை |
| சுபநேரம் : | 03.02 -04.32 |
| ராகுகாலம் : | 09.02 -10.32 |

## கூரிய வாளுடன் கடைக்குள் புகுந்த திருடனை போராடி மடக்கிப் பிடித்தார் தமிழ் இளைஞர்

### பிரிட்டனின் பிரிஸ்டல் நகரில் நடந்த சம்பவம் இது!

லண்டன், ஒக்.3

கூரிய வாளுடன் கடைக்குள் புகுந்து கடைப்பணியாளரைக் கொலை செய்யப் போவதாக அச்சுறுத்திய கொள்ளைக்காரனுடன் சாமர்த்தியமாகப் போராடி அந்த வெறியனிடமிருந்து வாளைக் கைப்பற்றியது மட்டுமின்றி அவனை கடையிலேயே பொலிஸார் வரும்வரை அடைத்து வைத்திருந்துள்ளார் தமிழ் வாலிபர் ஒருவர்.

பிரிஸ்டல் நகரில் இடம்பெற்றுள்ள மேற்படி சம்பவம் பற்றி தெரிய வந்துள்ளதாவது:

போதைப் பொருள் அருந்திய நிலையில் அன்று ஸ்பீட் என்ற பதினெட்டு வயது வாலிபர் ரமேஸ்குமார் இராசையா என்பவர் பணிபுரியும் கடைக்குள் பதினெட்டு அங்குல கூரிய வாளுடன் புகுந்துள்ளார். "உன்னைக் கொல்லப் போகிறேன் கத்தியால் குத்தப் போகிறேன்" என்று கூறியபடி வாளை விசுக்கிக் கொண்டு பாய்ந்துள்ளார். ஆனால் துணிச்சல் மிக்க பணியாளரான இராசையா கொள்ளைக் காரனை எதிர்த்து - கடையெங்கும் அவனைத் துரத்திச் சென்று போராடியுள்ளார். அதேவேளை கடை உரிமையாளரும் அவரது சகோதரியும் அவருடன் சேர்ந்து கொண்டு தும்புத் தடியாலும், பைப்பாலும் தாக்கியுள்ளனர். திருடனிடமிருந்த வாளைக் கைப்பற்றி அவனை சாமான்கள் வைக்கும் சிறு அலுமாரியில் அடைத்து பூட்டி விட்டு பொலிசாருக்கு அறிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று பிரிஸ்டல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட இவ் வழக்கில் எதிரியை, இளைஞர் பராமரிப்பு முகாமில் மூன்றரை ஆண்டுகள் தடுத்து வைப்பதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டது. இச்சம்பவம் பற்றி கேட்ட போது கடை சிப்பந்தியான இராசையா: "திருடன் தவறான கடையில் புகுந்து விட்டான்" என்று நகைச்சுவை பகர்ந்தார். கைகளிலும் மணிக்கட்டிலும் காயமடைந்திருந்த அவர் சிகிச்சை பெற்று வருகிறார். (ப)

## உலக ஆசிரியர் தினம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை

அச்சுவேலி, ஒக்.3

உலக ஆசிரியர் தினம் - 2008 எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படவுள்ள "உலக ஆசிரியர் தின நிகழ்வுகள்" ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் வரையறை செய்யப்பட்டுள்ளன.

உலக ஆசிரியர் தினத்தின் இந்த ஆண்டிற்கான தொனிப்பொருள் "எனது ஆசிரியர் எனக்கு முக்கிய மானவர்" (My Teachers Matter) என சர்வதேச கல்வியகமும்; ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான, கலாசார அமையமும் இணைந்த நிலையில் வரையறை செய்துள்ளன.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி நிர்வாகம் மற்றும் கல்வி வலயங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள், பாடசாலை மட்டங்களில் பல் வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (202-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி மகாவித்தியாலய
மாணவியும்
திரு.திருமதி
மதுரநாயகம்பிள்ளை - உமாவதி
தம்பதியரின் புதல்வியுமான
**செல்வி ம.சுர்த்திகா**
2008இல் நடைபெற்ற புலமைப்
பரிசில் பரீட்சையில் 147
புள்ளிகளைப் பெற்றுச் சித்தி
எய்தியமையையிட்டு
அவரையும் அவரை வழிநடத்தி
ஊக்குவித்த ஆசிரியர்களான
செல்வி பா.கல்யாணி ,
திரு.கி.பிரபாகரன்
ஆகியோரையும் பாராட்டுவதுடன் சுர்த்திகா மேன்மேலும்
கல்வியில் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா,
வானத்திலிருந்து வண்ணமுற வாழ்த்தும் பெரியப்பா மற்றும் அன்ரி
ஆசையப்பா, அண்ணா (லண்டன்), இந்தம்மா, அக்கா,
சின்னக்கா, சின்னண்ணா (கொழும்பு), ஐயா, அம்மம்மா,
அப்பப்பா மற்றும் அண்ணாமாமா, சின்னமாமா, இளைய மாமா, சித்தி.

(78930) ''ரவி மஹால்'', நாவற்காடு, வரணி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய
வித்தியாசாலை, வரணி
மாணவன்
**செல்வன் செல்வராசா**
**சிஜாந்த்**
அவர்கள் 2008ஆம் ஆண்டு தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சையில் 130
புள்ளிகள் பெற்றுச்
சித்தியடைந்தமையையிட்டு
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(P/554957) அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் கு.மகிழ்ச்சிகரன் அவர்களின் தந்தை
**அமரர் நாகமுத்து குணநாயகம்**
அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. (78928)

## நெஞ்சம் மறவாத நினைவுகளுடன்

## நான்காம் ஆண்டு



## திருமதி தீலகவதி குமரவேல்

(முன்னாள் பொதுமுகாமையாளர்,
ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்)

**தோற்றம்: 17.01.1953**

**மறைவு: 18.09.2004**

திதி: சதுர்த்தி

ஏணியாய் நின்ற நீங்கள்
தாயில்லாக் கன்றுகளாக
எம்மை தவிக்கவிட்டு
மாய்மாய்ப் போனதெங்கே!

கூடி வாழ்ந்த நாள்களை
எண்ணி கண்ணீரை எமக்குத்
தானமெனத் தர வைத்துத்
தவிக்கவிட்டு விட்டீர்கள்
அம்மா!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

''திருவேரகம்'' [illegible]
முத்துக்கிருஷ்ணர் [illegible]
சுன்னாகம்.
(78934)

# நிகழ்வுகள்

கத்தோலிக்கத் திருச்சபையினால் இவ்வாண்டில் சிறப்பிக்கப்படும் தூய பவுலின் ஆண்டினை முன்னிட்டு, தூய பவுலின் வாழ்க்கைப் பயணத்தை எடுத்துக் கூறும் 'பூவாகிய புயல்' என்னும் பக்தி, இசை, உரை நாடகச் சித்திரம் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் இவ்வாண்டில் தயாரித்து அளிக்கை செய்யும் மிகப்பெரும் நாடகங்களில் ஒன்றாக 'பூவாகிய புயல்' நாடகமும் அமைகின்றது.

* * *

வடமராட்சி,ஒக்.3

யாழ்.வர்த்தக தொழிற்துறை வேளாண் மகளிர் ஒன்றியம் மகளிர் சிறுவர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவை கௌரவிப்பு 10ஆம் ஆண்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத்தின் நிறுவுநரும் பணிப்பாளருமான எஸ்.ஜே.செல்வராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜா, கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சி.வே.குலநாயகம், பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன், பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், சோ.ஆ.நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் யூட் வொட்சன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி ப.யோகராஜா, வெ.சுப்பிரமணியம், முன்பள்ளி ஆலோசகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார்கள்.

மாவட்ட ரீதியில் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையை வலுவூட்டும் நோக்கில் அதற்கு ஆர்வமளிக்கும் விதத்தில் இந்த 10ஆவது ஆண்டில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சேவைச் சான் றிதழ் வழங்கி கௌரவிக்கப்படவுள்ள னர். (202-236)

* * *

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் நடைபெறும். 'இசையே வாழி' என்னும் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கலைத்தூது அழகியல் கல்லூரியினர் கேட்டுள்ளனர். (202)

* * *

மந்திகை,ஒக்.3

பருத்தித்துறை, தும்பளை யோக சாந்தி நிலையத்தினரின் மாணவர்கள் நடத்தும் யோகாசனக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா இந்நிகழ்விற்குத் தலைமை வகிப்பார். யோகசாந்தி நிலைய இயக்குநர் ஜே.தேவராஜேந்திரனின் வழி நடத்தலில் யோகாசனப் பயிற்றுநர் ரீ.சிறீகாந் யோகாசனக் கண்காட்சிகளை வழங்குவார். (202-218)

* * *

யாழ்.கல்விக் கோட்டம் நடத்தும் ஆசிரியர் தின விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் யாழ். கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி ம.சிவபா[illegible] தலைமையில் இடம்பெறவுள்ளது. (204)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் 115 புள்ளிகளைப் பெற்றுச்
சித்தியடைந்த எமது மாணவி
**செல்வி புஸ்பராசா கோபிகா**
அவர்களை வாழ்த்துவதோடு இவரை
வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கு
நன்றியினைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/குளமங்கால் றோ.க.வி., மல்லாகம். (78894)

## நன்றிகள் பல நூறு



2008ஆம் ஆண்டு 5ஆம் தரப்
புலமைப் பரிசில் பரீட்சையில் 134
புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த
யா/அல்வாய் ஸ்ரீலங்கா
வித்தியாசாலை மாணவனும் எமது
இனிய புதல்வனுமான
**தவயோகநாதன் றெனோசன்**
அவர்களது வெற்றிக்கு துணைநின்ற
பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,
வியாபாரிமூலை வசந்தம்
கலைக்கூடம் ஆசிரியைகள்,
நிர்வாகிகள்,
சுபாசினி ஆசிரியை (கொலம்பஸ்), அ.அகிந்தன் (பவா)
ஆகியோருக்கு நன்றிகள் பலநூறு.

பூம்புகார்,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (78935)

வாழ்த்துவோர்:
க.தவயோகநாதன் ரேணுகா (பெற்றோர்).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
மாணவியும் ரஞ்சன் - சித்திரா
தம்பதியரின் புதல்வியுமான
**செல்வி கஜானு ரஞ்சன்**
2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் 129 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையை மகிழ்ச்சியுடன் பாராட்டுவதோடு, அவர் மேலும் பல கலைகளும் பெற்றுப் பல்கலைக்கழகம் சென்று சகல செல்வத்துடனும் வாழ இறைவன் அருள்புரிவார். மற்றும் இவருடைய கற்றலுக்கு உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

மெமோறியல் வீதி,
மானிப்பாய். (78927)

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தங்கைகள், அம்மம்மா,
அம்மப்பா, அன்ரி, மாமாமார், தம்பி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி சபாநாதக் குருக்கள் சாருநிதா**



துன்னாலை மெதடிஸ்த மிஷன்
தமிழ்க் கலவன் பாடசாலை
மாணவி சாருநிதா 2008ஆம்
ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சையில் 127 புள்ளிகளைப்
பெற்றுச் சித்தி எய்தியமையையிட்டு
ஆக்கமும் ஊக்கமும் அளித்த
பாடசாலை அதிபர் கி.குகநாதன்,
ஆசிரியை பத்மநாதன் சாந்தினி ,
தர்மராசா குமுதினி ஆகியோருக்குப்
பாராட்டுக்கள் தெரிவிப்பதோடு
தனியார் வகுப்பு நடத்தி
ஊக்கமளித்த
செல்லக்குமார் ஷகிலா அவர்களுக்கும் எமது உளமான
பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். இவருடன் சேர்ந்து சித்தி
எய்திய மாணவர்களைப் பாராட்டி மேலும் சிறப்புற
அல்லையம்பதி முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| சிவானி சிவகுமார் | - 141 |
| செல்லக்குமார் சயந்தன் | - 132 |
| கமலநாதன் பிரதீஸ் | - 122 |
| பவித்திரா பரமேஸ்வரன் | - 120 |
| சோபியா தெய்வேந்திரன் | - 119 |
| இராஜசிங்கன் திவாகர் | - 113 |

இவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாராட்டி மனமுவந்து வாழ்த்துவோர்:
அப்பா - சிவஸ்ரீ ராம்சபாநாதக் குருக்கள்,
அம்மா - சந்திரலட்சுமி, அக்காமார், அண்ணன்.

துன்னாலை.
(சி/554959)

## மரண அறிவித்தல்

### வாரி சரவணை (சாரதி)

மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாரி சரவணை 01.10.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிள்ளையம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குணராசாவின் அன்புத் தந்தையும் தேவிகாவின் (லண்டன்) அன்பு மாமனும் ஜேர்மனியில் வசிக்கும் டுபேந்திரன், ஜெயந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கிட்டுணர் மற்றும் மாணிக்கம் (மண்டான்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.10.2008) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவரசம்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டான்.
(சி/554956)

தகவல்:
அ.வேலும்மயிலும் (தோரை - உறவினர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# க.பொ.த (சா.த.) கையேடு வழங்கப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஒக்.3

2008 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை மாதிரி வினாக்கள் அடங்கிய கையேடு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் வழங்கப்படவுள்ளது.

உரிய பாடசாலைகள் தங்களுக்கு உரிய பிரதிகளை யாழ். கல்வி வலயப் பணிமனையில் இன்று பெற்றுக் கொள்ளலாம்என்று யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் தெரிவித்தார். (01)

# ஈழத் தமிழருக்கு உடன் உதவாவிட்டால் மத்திய அரசை தமிழகம் மன்னிக்காது

## தே.மு.தி.க. பண்ருட்டி ராமச்சந்திரன்

இலங்கையில் தமிழினம் பேரழிவை சந்தித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு உதவுவதற்கு இந்திய அரசு உடனடியாக விமானம் மூலம் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்க வேண்டும்.

- இவ்வாறு தே.மு.தி.க. அவைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு-

இலங்கையில் தமிழினம் பேரழிவை சந்தித்துக் கொண்டிருக்கிறது. வன்னிப் பகுதியில் இலங்கை இராணுவத்தின் முப்படைகளும் சூழ்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதனால் சுமார் 6 லட்சம் தமிழர்கள் அங்கே அகதிகளாகி உண்ண உணவின்றியும், வசிக்க வீடின்றியும், உணவு, மருந்துப் பொருள்கள் போன்ற அத்தியாவசிய வசதிகள் எதுவுமின்றியும் அவதிப்பட்டு வருகிறார்கள்.

பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு உதவத் தயார் என்று இங்கிலாந்து மக்கள் தெரிவித்தனர். ஆனால் இலங்கை அரசு தடுத்திவிட்டது. ஐ.நா. சபை சார்பில் சில தொண்டு நிறுவனங்கள் தமிழர்களுக்கு உதவி வந்தன. அவர்களையும் இலங்கை அரசு வெளியேற்றி வருகிறது. இத்தகைய சூழலில் இலங்கையில் தற்போது நிலவும் நிலைமையை நாம் அனுமதிக்கக் கூடாது. அங்கு பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்குத் தேவையான உதவிகளை இந்தியா உடடினயாகச் செய்ய வேண்டும் - என்றார்.

# ஈழத்தமிழருக்கு ஆதரவாக அனைத்துக் கட்சிகளும் ஒருநாள் பொது வேலைநிறுத்தம் செய்ய முன்வருக!

## திருமாவளவன் கோரிக்கை

ஈழத் தமிழர் களுக்கு எதிரான இனவெறியாட்டம் தற்போது ஈவிரக் கமற்ற முறையில் தலைவிரித்தாடுகி றது. குழந்தைகள், முதி யோர், பெண்கள் என அப்பாவி பொதுமக்களை இலங்கை இராணுவத்தினர் கொடூரமாகக் கொன்று குவித்து வருகின்றனர்.

எனவே, தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் தங்களுடைய கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒருமித்த கருத்தோடு ஒருநாள் பொதுவேலை நிறுத்தம் செய்ய முன்வரவேண்டும்.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஈழத் தமிழர்கள் மீது நடத்தும் கொடூரத் தாக்குதல்கள் மூலம் அவர்களை அழிப்பதுடன் எஞ்சியவர்களை அச்சுறுத்தல் மூலமாக வன்னிப்பகுதியில் இருந்து விரட்ட வேண்டும் என்பதே இலங்கைச் சிங்கள அரசின் நோக்கமாக உள்ளது. உணவு, உடை, மருந்து கிடைக்காமல் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டபட்டினியைத் திணித்து கடும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்தில் அடுக்கடுக்கான போராட்டங்கள் நடைபெற்ற போதிலும் சிங்கள இனவெறியாட்டத்தின் கொடூரம் குறைந்தபாடில்லை.

எனவே தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் தங்களுடைய கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒருமித்த கருத்தோடு ஒருநாள் பொதுவேலை நிறுத்தம் செய்ய முன்வரவேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி கேட்டுக் கொள்கிறது - என்று திருமாவளவன் கூறியிருக்கிறார். (அ-ஒ)

# தமிழகத்தில் முக்கிய தலைவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் அமைதி வழியில் தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று இந்த உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

சொந்த நாட்டிலேயே அகதிகளாக உள்ள ஈழத் தமிழர்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி சென்னை, சேப்பாக்கத்தில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க., விஜயகாந்தின் தே.மு.தி.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட், ம.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அ.தி.மு.கவினர் கடைசி நேரத்தில் இப்போராட்டங்களில் கலந்துகொள்ளாமல் தவிர்த்துக் கொண்டனர்.

நடிகர் விஜயகாந்தின் தே.மு.தி.கட்சி உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டமையாலேயே, அ.தி.மு.க கடைசி நேரத்தில் இந் நிகழ்வில் பங்குபற்றவில்லை என்று தகவல்கள் தெரிவித்தன.

சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே அமைக்கப்பட்டிருந்த உண்ணாவிரதப் பந்தலை நோக்கி ஏராளமான பொது மக்கள் திரண்டனர். உண்ணாவிரதப் பந்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா, மாவட்ட செயலாளர் தா.பாண்டியன், இணை செயலாளர் சி.மகேந்திரன், தே.மு.தி.க சார்பில் முன்னாள் அமைச்சரும், இலங்கை தமிழர் பிரச்சினையை ஐ.நா.சபையில் ஒலிக்கச் செய்தவருமான பன்ருட்டி இராமச்சந்திரன், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் டபிள்யூ.ஆர்.வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அவருடன் தே.மு.தி.க தொண்டர்கள் தங்கள் கொடிகளுடன் பெருமளவில் கலந்து கொண்டார்கள். அக்கட்சியின இளைஞர் அணியினர் மஞ்சள் நிற சீருடையுடன் வந்திருந்தனர்.

உண்ணாவிரதத்தில் தொல். திருமாவளவன், (விடுதலைச் சிறுத்தைகள்), பழ.நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), டாக்டர் கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்), இரா.ஜனார்த்தனம் (உலகத் தமிழர் பேரவை), திண்டிவனம் இராம மூர்த்தி (தேசியவாதக் காங்கிரஸ்), ஜெகவீர பாண்டியன் (சமூக நீதி), ஷேக் தாகூத் (தமிழ்க முஸ்லிம் லீக்), இசக்கிமுத்து (மூவேந்தர் முன்னணிக் கழகம்), வேட்ட வலம் மணிகண்டன் (உழவர் உழைப்பாளர்), சுப. இளவரசன் (மக்கள் நீதி), துரையரசன் (மறுமலர்ச்சி மக்கள் தமிழகம்), விஜயடிராஜேந்தர் (லட்சிய தி.மு.க.), இயக்குநர் சீமான், கவிஞர் முத்துலிங்கம், ஓவியர் புகழேந்தி, டாக்டர் ரவீந்திரநாத் உட்படப் பலர் கலந்துகொண்டார்கள்.

தமிழகம் முழுவதும் பல் வேறு மாவட்டங் களில் உண்ணாவிரதப் போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் நடைபெற்றது. எதிர்க் கட்சிகள் பெருமளவில் இதில் பங்கேற்றன. (அ-ஒ)


பொருளியல் கல்லூரி, யாழ்.

A/L 2010

LOGIG

குறியீட்டு அளவையியல்

சனி - ஞாயிறு

R.P.சர்மா

Note:- இதே அலகு

BARATHY

சித்தன்

கேணியில்

திங்கள் - புதன்


# மரண அறிவித்தல்கள்



## திருமதி ஐயாத்துரை சரஸ்வதி

மில்லேன், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது அளுத்மாவத்தை, கொழும்பில் வசித்தவருமான திருமதி ஐயாத்துரை சரஸ்வதி நேற்று (02.10.2008) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அன்னாரது பிரிவுத்துயர் மில்லேன், மல்லாகத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் லேன்,<br>மல்லாகம்.

தகவல்:<br>பொ.காண்டீபன் (பேரன்)

(78953)



## திருமதி சுப்பிரமணியம் கனகாம்பிகை

கல்வயலைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகாம்பிகை நேற்று (02.10.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் மஞ்சுளா (யாழ். போதனா வைத்தியசாலை ), பகீரதி (லண்டன்), கருணாகரன், சிவசக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகநாதன், ரங்கநாதன், யசோதா (பிரதேச செயலகம், நல்லூர்), இந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் விஸ்ணுசாந், நர்த்தனா, தாரகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2008) வெள்ளிக்கிழமை மு.ப 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தற்போதைய முகவரி:**<br>**'639/4, நாவலர் றோட், நல்லூர்,**<br>**யாழ்ப்பாணம், (பாப்பையா கடையடிச் சந்தி)**<br>**தொ.பே.0776410781, 0602210982**

தகவல்:<br>சுப்பிரமணியம்<br>(கணவர்)

(78949)


B. Sc. in Comp. Sc.

New Batch ஆரம்பம்

Weekend Batch யாழ்ப்பாணத்தில்
சனிக்கிழமை 05-10-2008 அன்று

Weekday Batch சங்கானையில்
திங்கட்கிழமை 06-10-2008 அன்று

எமது நிறுவனத்திலேயே வேலைசெய்துகொண்டே
B. Sc. in Comp. Sc.
படித்துப் பட்டதாரியாக முடியும்
நீங்கள் கற்கைநெறிக்கு பதிவுசெய்த உடன் வேலை வழங்கப்படும்

Fast Track Batch
HND, Diploma, BIT, படித்தவர்களுக்காகவும்
பட்டதாரியல்லாத கணினித்துறைசார் வல்லுனர்களுக்காகவும்
பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்!

எமது நிறுவனத்தின் ஆலோசகர்கள்
Dr.P.Balasundarampillai
(முன்னாள் துணைவேந்தர் யாழ் பல்கலைக் கழகம்)
Prof.A.Shanmugadas
ஆகியோரின் உயரிய வழிகாட்டலில்

NORTH LANKA IIT
Main Street, Chankanai. 060 221 4305
New College of Higher Studies No. 95, Ariyakulam, Jaffna.

B. Sc. in Multimedia
இக் கற்கைநெறியானது............
ஒரு வருடம் யாழ் / கொழும்பிலும்
2ம் 3ம் வருடம் வெளிநாட்டில் பின்வரும்
பல்கலைக் கழகங்களில் ஏதாவதொரு இடத்திலும்
பயில முடியும்

University of Greenwich
SAXION Universities of Applied Sciences
East London College
eie

வெளிநாடு செல்வதற்கான விசா
பகுதி நேர வேலைவாய்ப்பு
2 மாதத்தினுள் Resident Permit Approval
தங்குமிட வசதி பெற்றுத்தரப்படும்.
NOTTINGHAM COLLEGE OF LONDON
உடன் இணைந்து.........

Trinity பல்கலைக் கழகத்திலிருந்து
கற்கைநெறியைப் பூர்த்திசெய்த
மாணவர்களது சான்றிதழ்கள்
கிடைக்கப் பெற்றுள்ளன என்பதனை
மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்!!!
அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!!!


# தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## விண்ணப்பம் கோரல்

1) தேவஸ்தான எழுதுவினைஞர்:-
கணனித் துறையில் அறிவுடையவராகவும், கணக்கியல் துறையில் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
வயதெல்லை:- 30 வயதுக்குமேல் 65 வரை

2) தேவஸ்தான களஞ்சியப் பொறுப்பாளர்:-
இத்துறையில் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை:- 30 வயதுக்குமேல் 65 வரை

3) நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபம் நிர்வாக அலுவலர்:-
இப்பதவிக்கு பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை:- 40 வயதுக்குமேல் 65 வரை

மேற்படி விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரங்களுடன் சமயப் பெரியார்கள், கிராம அலுவலர் போன்றவர்களின் நற்சான்றுடன் 10.10.2008 திகதிக்கு முன்னர் விண்ணப்பம் செய்யவும்.

தலைவர்,<br>ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,<br>தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியப் பிரதமரை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரச தலையிட்டு தீர்வுகாண வேண்டும்-என்றுஇந்தியப்பிரதமர்மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினரும் தமிழக முதல்வர் கருணாநிதியின் மகளுமான கனிமொழி நேற்று மாலை பிரதமரை நேரடியாகச் சந்தித்து இக் கோரிக் கையை விடுத்தார்.

முதல்வர் கருணாநிதியின் அறிவுரையின் பேரிலேயே இச்சந்திப்பு நடைபெற்றது எனக் கூறப்பட்டது.

## பகலில் விமானத்தாக்குதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைத் தலைமையகம், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் மற்றும் அவற்றுக்கு அருகில் உள்ள வீடுகள், வீதிகள் என்பன கடுமையாகச் சேதமடைந்தன.

இத்தாக்குதலில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டதுடன், ஐவர் படுகாயமடைந்தனர் என்று கூறப்பட்டது.

இத்தாக்குதலில் சுப்பையா சிவலிங்கம்(வயது -48) மற்றும் தங்கவேல் ரகு (வயது 30) ஆகிய இருவரும் காயமடைந்தவர்களில் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் வீதியால் சென்று கொண்டிருந்த வேளையிலே விமானத் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

அந்தப் பகுதியிலிருந்து ஜெற் விமானங்களை நோக்கி விடுதலைப்புலிகளால் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகளின் எதிர்ப்புத் தாக்குதலினால் விமானங்கள் உடனடியாக வன்னி வான்பரப்பிலிருந்து தப்பிச் சென்றுவிட்டன- என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான செயலகத்திலேயே யுத்தநிறுத்த ஒப்பந்த காலத்தில் நோர்வே உட்பட வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் இடையிலான முக்கிய சந்திப்புகள் நடைபெற்றன.

தங்களது அரசியல் தலைமைச் செயலகமும் சமாதான செயலகமும் விமானப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதமடைந்துவிட்டன என்பதை விடுதலைப்புலிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

கிளிநொச்சி நகரத்தின் மீது இராணுவத்தினர் நேற்று இரவு கடும் ஷெல் தாக்குதலை நடத்தினர். கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிவரையான இடங்கள் மீது அகோர ஷெல் வீச்சு நடத்தப்பட்டது. நூற்றுக்கணக்கில் ஆட்லறி ஷெல்களும் பல்குழல் ஷெல்களும் வீழ்ந்து வெடித்தன.

### ஆஸ்பத்திரிக்கு அயலிலும் ஷெல் தாக்குதல்

ஷெல் வீச்சினால் மக்களின் வாழ்விடங்கள், வணிக நிலையங்கள் பெரும் எண்ணிக்கையில் அழிந்தும் சேதமாகியும் உள்ளன. கிளிநொச்சி ஆஸ்பத்திரியைச் சூழவும் தொடர்ந்தும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. ஷெல் தாக்குதலினால் கிளிநொச்சி நகரம் இரவில் மூன்று மணி நேரம் தொடர்ந்து அதிர்ந்தது.

கிளிநொச்சி நகரத்துக்கும் 155ஆம் கட்டைக்கும் இரணைமடுச் சந்திக்கும் இடையில் உள்ள பகுதிகளில் மீது தொடர்ச்சியாக ஆட்லறி மற்றும் பல்குழல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கிளிநொச்சி நகருக்கு தென்புறத்தே உள்ள கனகாம்பிகை குளத்தடியில் ஷெல் வீச்சில் அகப்பட்டு இரண்டு பிள்ளைகளின் தந்தையான பாலசிங்கம் பவுணன் என்பவர் மரணமானார்.

இன்று பெரும் தாக்குதலைத் தொடுக்கும் வகையில், அதற்கு முன்னோடியாக இத்தாக்குதலை படையினர் நடத்தியிருக்கக் கூடும் என கருதப்படுகிறது. (அ)

## நேற்றும் ஆலய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தே தேடுதல்கள் பரவலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று தினங்களாக வலிகாமம் பகுதியில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆலயத்தின் சுற்றுப்புறம், தேர்க்கொட்டகை, மடைப்பள்ளி, களஞ்சிய அறை என்பன சல்லடைபோட்டு தேடுதல் நடத்தப்படுகின்றன.

சில ஆலயங்களில் மூலஸ்தானம் வரை படையினர் சென்று சோதனைகளை நடத்துகின்றனர்.

வலிகாமம் மேற்குப் பகுதியில் வழமையை விட சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தொட்டிலடி, சீரணி, மாகியப்பிட்டி ஆகிய சந்திகளில் வாகனங்களும் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

இதேவேளை -

வடமராட்சியில் தொண்டமானாறு, கெருடாவில், உடுப்பிட்டி உட்பட ஏனைய பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் படையினர் தேடுதல்களை நடத்தினர்.

ஆலயங்களில் மூலஸ்தானம் வரை படையினர் சென்று துருவித்துருவி சோதனைகளை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ-1-38)

## ஐம்பத்தொரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவிலிருந்து வன்னிக்குச்சென்றன.

வாகனத் தொடரணியுடன் உலக உணவுத் திட்ட அதிகாரிகளும் கிளிநொச்சி அரச அதிபரும் வன்னிக்குச் சென்றுள்ளனர்.

வன்னியில்மூன்று இடங்களில் உணவு விநி யோகம் நடைபெறவுள்ளது.

## கொக்குவில் பிரம்படிச் சந்தி மின்மாற்றியை நோக்கி குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஒக். 03

கொக்குவில் பிரம்படிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள மின்மாற்றியை இலக்கு வைத்து நேற்றிரவு 7மணியளவில் குண்டு வீசப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்த மின்மாற்றிக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தின் பின்னர் பிரம்படி வீதியில் வசிப்பவர்களை அழைத்து வந்து படையினர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கினர். பின்னர் வீடு செல்ல அனுமதித்தனர்.

(அ-1)

## கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் கூறினார்.

இந்நகரைச் கைப்பற்றும், நன்கு திட்டமிடப்பட்ட படை நடவடிக்கை தொடர்கிறது என்றும் இதனால் புலிகளின் தலைவர் பிரபாகரன் பதுங்கு குழி பதுங்கு குழியாக மாறி மாறி அவரது உயிரைக்காப்பாற்றி வருகிறார் என்றும் அவர் மேலும் சொன்னார்.

தேசியப் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் அரசின் நன்கு திட்டமிடப்பட்ட படை நடவடிக்கை வெற்றிகரமாகத் தொடர்கிறது.

வடக்கில் புலிகளின் வசமிருந்து அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு படையினர் கிளிநொச்சியை அடைந்துள்ளனர். கிளிநொச்சி நகரைப் பிடிக்க இன்னும் மூன்றரைக் கிலோ மீற்றர் தூரம் மாத்திரமே உள்ளது.

வடக்கில் யுத்தம் தீவிரமடைந்தால் தெற்கிற்கு யுத்தம் கொண்டு வரப்படும் என்று புலிகள் மிரட்டினர். ஆனால், கிளிநொச்சியையே தக்கவைத்துக் கொள்ளமுடியாமல் புலிகள் பின்வாங்குகின்றனர்.

இந்தப் பயங்கரவாதத்தை அடுத்த தலைமுறைக்கும் விட்டுவைக்க நாம் விரும்பவில்லை.

படை நடவடிக்கை மிகத் தீவிரமாகத் தொடர்கிறது. இந்த நேரத்தில் தொண்டு நிறுவனங்களின் பாதுகாப்புக்கு ஏதும் பிரச்சினை ஏற்படலாம் என்பதனாலேயே நாம் அந் நிறுவனங்களை வன்னியில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டோம்.

அந்நிறுவனங்கள் வெளியேறுவதன் மூலம் வன்னியில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்று சிலர் கூறினர். ஆனால், அரசு ஐ.நா.உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து வன்னிக்கு உணவுப் பொருள்களை அனுப்பி வருகின்றது..

வன்னி மக்களும் எமது மக்கள் என்பதால் அவர்களை நாம் கைவிடமாட்டோம். அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை குறைவில்லாமல் அனுப்புவோம்.

அந்த மக்கள் புலிகளின் பயங்கரவாதப் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். அவர்களை நாம் நிச்சயம் மீட்டெடுப்போம். கிழக்கு மக்களுக்கு வழங்கிய சுதந்திரத்தை நாம் வடக்கு மக்களுக்கும் வழங்குவோம்.

25 வருடங்களுக்கும் மேலாக புலிகள் நடத்தி வந்த பயங்கரவாத நடவடிக்கைகள் மிக விரைவில் முற்றுப் பெறும் - என்றார்.

(அசி)

## போக்குவரத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்து விதிமுறைகளைக் கண்காணிக்கும் செயற்பாட்டில் பொலிஸார் இன்று முதல் ஈடுபடுவார்கள்.

இங்கு போக்குவரத்து விதிமுறைகள் முற்றாகப் பின்பற்றப் படவில்லை என்பது நான் இங்கு வந்த போது எனக்குத் தெரிந்தது. யாழ்.மேல் நீதி மன்ற நீதிபதியும் போக்குவரத்து விதிமுறைகளின் அவசியத்தை வலியுறுத்தினார். அதற்குப் போதிய ஒத்துழைப்புத் தருவதாக இராணுவ அதிகாரிகளும் உறுதியளித்துள்ளனர்.

இன்று முதல் இம்மாதம் 18ஆம் திகதி வரை போக்குவரத்து விதிமுறைகளை பொதுமக்களுக்கும், சாரதிகளுக்கும் விளக்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபடுவார்கள். அதன் பின்னர் ஒருவாரத்துக்கு விதி முறைகளை மக்கள் சரியாகக் கடைப்பிடிக்கின்றார்களா என்பதை பொலிஸார் அவதானிப்பார்கள். பின்னர் இம்மாதம் 25ஆம்திகதி முதல் விதிகள் இறுக்கமாக நடைமுறைப் படுத்தப்படுவதுடன் அவற்றை மீறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக் கையும் எடுக்கப்படும்.

போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விளக்கங்களை வழங்குவதற்குக் கொழும்பில் இருந்தும் அதிகாரிகள் வரவழைக்கப்படுவார்கள். சுவரொட்டிகள் மூலமும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படத்தப்படும்- என்றார்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவிக்கையில்-

வீதிகளில் வாகனங்களில் சமாந்தரமாகப் பயணம் செய்வோரைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும். போதனா வைத்தியசாலை நவீன சந்தை, யாழ்.நகரப் பகுதி வீதிகள் ஆகிய பகுதிகளில் பொலிஸார் வீதி ஒழுங்கைப் பேணும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். யாழ்ப்பாணத்தில் வீதி ஒழுங்கு இன்று அவசியமான ஒன்றாகும். முதலில் யாழ். மாநகர சபை எல்லைக்குள் அவை அமுல்படுத்தப்பட வேண்டும். நீதித்துறை அதற்குப் போதுமான ஒத்துழைப்பை வழங்கும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நீதிவான் இ.வசந்தசேனன், யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன், யாழ். நகர கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜே. ஆர்.குலதுங்க, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் மாரப்பன, யாழ்.நகர் சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் பேர்னாட் பெரேரா, மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ மற்றும் வடபிராந்திய போக்கு வரத்துச் சபை அதிகாரிகள், தனியார் சிற்றூர்திச் சேவை சங்கப்பிரதிநிதிகள், ஓட்டோ சங்கப் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்கள் வீதி ஒழுங்கில் ஈடுபடுவதற்கான விஷேட "ஜக்கற்று" களும் நிகழ்வின் போது அதிபர்களிடம் வழங்கப்பட்டன. (அ-50-111)

UNIT Jaffna Nelliady
Now Available
UNISTA Intel 945Gc Mother board, Intel 1.8Ghz processor, 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS
UNIPRO Asus Intel 945Gc Mother board, Intel Dual Core 2.0Ghz 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS
UNIDLX Intel Classic Main Board, Core 2 Duo 2.2Ghz, 1Gb DDR2, 160Gb Hdd, DVD-RW, 17" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS
UNISPL Intel Classic Board, Core 2 Duo 2.6Ghz Extreme, 2Gb DDR2, 250Gb Hdd, DVD-RW, 17" LCD, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS
Tables, Chairs & UPS
Printer & Scanners Hp D1460, HP P1005 Laserjet Canon Lide 25, HP G2410 HP All in One (3 In One) HP All in One,(4 In One)
Others Keyboards, Mouse Optical Speaker Woofers Creative & MicroLab
Monitors 15", 17 Samsung / Viewsonic Semi / Flat CRT, 17" Samsung LCD Wide 19" Samsung LCD Wide 128Mb AGPVGA 256Mb PCI EXPRESS VGA
We Are Not Big But The Best
மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna. 4590962,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy 2264871

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
100% பயிற்சி நெறி
Chip & Card level Trouble shooting, Assembling, Various Mother Board Handling, Upgrading, Fault Finding, Repairing, Servicing, Printer, Scanner & Com device management, Software Installation, Configuring Internet Interfacing & Trouble shooting, Networking & Etc.
ஆரம்பம் :- 05,06.10.2008
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 222517

இலங்கை வங்கி போட்டிப்பரீட்சை
பொதுஅறிவு
பகுத்தாய்வு திறன்
ஆங்கிலம்
கருத்தரங்கு:- சனி (04.09.2008) 12 மணி தொடக்கம் 4.30 வரை
கட்டணம்:- 250/=
வழிகாட்டி நூலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் போதனா வைத்தியசாலை முன்பாக)

PHYSICS K.Selvan
DAY CLASS
BATCH-I Sat, Sun, (8.00 - 9.30 a.m)
BATCH-II Mon,Wed, Fri (5.00 - 6.00 p.m)
NEC
NAVALAR Anaipanthy, Jaffna.

2009 A/L 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள்
புதிய அலகுகள் ஆரம்பம்
04 - 10 - 2008 (sat)
NEC

CHEMISTRY
A/L 2010
ஒட்சியேற்றலும் தாழ்த்தலும் (Sat, Sun- 12.30 - 1.30 P.m)
(Sat, Sun- 2.00 - 3.00 P.m)
A/L 2009
(Sat, Sun- 11.00 - 12.30)
DAY CLASS
(Sat, Sun- 9.30 - 11.00)
ஆரம்பம்:- 04.10.2008 Saturday
S.Vasu
NEC

PHYSICS
A/L 2010
(Sat, Sun6.00 - 7.00 a.m)
ஆரம்பம்:- 04.10.2008
K.Selvan
NEC

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2009
இணைந்த கணிதம்
சார்பு வேகம்
Sat, Sun 4-6 p.m
Mr.K.K.கஜன் B.sc
PHYSICS
PAPER
CHE Mr.
SPOKEN ENGLISH

BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்
3 மாதகாலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
புதிய பிரிவு - 3
ஆரம்பம்:-04.10.2008
Sat - 4.00pm

CHEMISTRY
A/L 2010
(Sat, Sun- 3.00 - 4.00 P.m)
(Sat, Sun- 4.00 - 5.00 P.m)
(Sat, Sun- 5.00 - 6.00 P.m)
A/L 2009
(Wed, Thur- 4.30 - 5.30 P.m)
Paper Class (Organic)
Mon,Wed, Fri - 3.00 - 4.00 P.m
DAY CLASS
(Mon, Fri - 4.30 - 5.30 p.m)
ஆரம்பம்:- 04.10.2008 Saturday
S.Vasu
NAVALAR Jaffna.

கணக்கீடு
A/L 2009
A/L 2010
S.தவா B.com(Hons) (Acc.sp1)
UNIVERSAL

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org